பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஐப்பசி 25 புதன்கிழமை (10-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:351

# வன்னிவந்த பாலா உடனடியாக பிரபாவுடன் மந்திராலோசனை!

## முன்னதாகக் கட்டுநாயக்காவில் எரிக் சொல்ஹெய்முடன் ஆராய்வு

கிளிநொச்சி, நவம்பர்10

**விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம், தனது துணைவியார் அடேல் பாலசிங்கம் சகிதம் நேற்று முற்பகல் வன்னி வந்துசேர்ந்தார். வந்தகையோடே தலைவர் பிரபாகரனுடன் மந்திராலோசனை நடத்துவதற்கு அவர் விரைந்தார்.**

**முன்னதாக, நேற்றுக் காலை கட்டுநாயக்கா விமானநிலைய விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த சமயம் எரிக் சொல்ஹெய்ம் உட்பட நோர்வே அனுசரணைக் குழுவின் பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடினார்.**

நேற்றுமுன்தினம் இரவு லண்டனிலிருந்து புறப்பட்ட அன்ரன் பாலசிங்கம், நேற்றுக்காலை கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தார்.

அங்கு சொற்ப நேரம் விருந்தினர் விடுதியில் தங்கிநின்ற அன்ரன் பாலசிங்கத்தை எரிக் சொல்ஹெய்மும் கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் சந்தித்தனர். அப்போது நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் தலைமையிலான நோர்வேக் குழுவின் உத்தேச வன்னி விஜயம், அங்கு தலைவர் பிரபாகரனுடன் அவர்கள் நடத்தவிருக்கும் பேச்சுக்களை ஒட்டிய ஏற்பாடுகள் ஆகியவை குறித்துப் பேசப்பட்டதாகத் தெரியவந்தது.

இந்தச் சந்திப்பை அடுத்து காலை 10 மணியளவில் கட்டுநாயக்கா விமானத்தளத்திலிருந்து விமானப்படை விசேட ஹெலிகொப்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஏற்பாடுகள் கிளிநொச்சியில் ஜரூர்!

கிளிநொச்சி,நவ.10

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தின் வன்னி வருகை மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனின் வன்னி விஜயம் ஆகியவற்றையொட்டி கிளிநொச்சி மற்றும் பிரதேசங்களில் புலிகளின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தையும், நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்

(14ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் தீபாவளி சிறப்புமலர்

**வர்ணப் பக்கங்கள் அடங்கலாக உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் மொத்தம் முப்பத்தெட்டுப் (38) பக்கங்களில் நாளை வெளிவருகிறது.**

# தலைவருக்கும் எனக்கும் பிரச்சினையா? நகைக்கின்றார் கடற்புலித் தளபதி சூசை!

கிளிநொச்சி,நவ.10

"தலைவர் வே.பிரபாகரனுக்கும் எனக்கும் பிரச்சினையா? இதெல்லாம் வழமையான கட்டுக்கதைகளில் ஒன்றுதான்" - என்று கூறி நகைத்தார் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை.

நேற்றுக்காலை விசேட ஹெலிக்கொப்டரில் கிளிநொச்சி மைதானத்தில் வந்திறங்கிய புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்தையும் அவரது துணைவியாரையும் வரவேற்பதற்காகக் கேணல் சூசை அங்கு வந்திருந்தார். அப்போது "தலைவருக்கும் உங்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று வெளிவரும் செய்திகள் குறித்து என்ன கூற விரும்புகிறீர்கள்?" - என்று கேட்டோம்.



கேணல் சூசை, தமிழ்ச்செல்வன் மற்றும் புலிகளின் பிரமுகர்களுடன் அன்ரன் பாலசிங்கம். *(மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்)*

அப்போது அவர் கூறியதாவது:-

காலத்துக்குக் காலம் அவர்கள் முன்வைக்கும் ஊடகப் போரின் - உளவியல் ரீதியான போரின் - மற்றோர் அங்கம்தான் இது.

எம்மை வெல்லமுடியாத நிலையில், இப்படியான பொய்த் தகவல்களை வெளியிட்டுப் பரப்பிக்கொண்டிருப்பார்கள். இதற்கெல்லாம் பதில் சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை. அது வீண்வேலை.

உளவியல் ரீதியான அவர்களின் போர்களை நாம் பொருட்படுத்தவே போவதில்லை. அதுதான் அவர்களுக்கு - அவற்றுக்கு - தகுந்த பதிலடி.

இத்தகைய பித்தலாட்டப் பிரசாரங்களைத் தமிழ் மக்கள் நம்பமாட்டார்கள்; அவற்றுக்கு எடுபடமாட்டார்கள்; ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

1989ஆம் ஆண்டில் மணலாற்றில் தலைவர் பிரபாகரனைத் தேடியோர், தங்களுக்கு இயலாமல் போகவே அவர் இறந்துவிட்டார் என்று கதை பரப்பவில்லையா? அது போன்றதுதான் இந்தப் பிரசாரமும் - என்று கூறி முக நகைத்தார் கேணல் சூசை.

சிங்கப்பூருக்குச் சென்ற விடயம் குறித்துக் கேட்டபோது:-

மருத்துவச் சிகிச்சைக்குப் போனேனே தவிர, வேறு எதற்கும் போகவில்லை. சிங்கப்பூர் சென்றேன் என நீங்கள் கூறவேண்டுமா? மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன். - என்று பதிலளித்தார் அவர்.

இலங்கை - இந்திய உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்துக் கேட்டபோது -

கொஞ்சம் பொறுங்கள். மாவீரர் தினத்தையொட்டி 26,27 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மற்றும் வடமராட்சியில் (வடமராட்சி கிழக்கில்) பேசுவேன். அப்போது இது பற்றிக் கூறுவேன். கடற்புலிகளின் செயற்பாடுகள் குறித்தும் விரிவாகக் கூறுவேன் - என்றார் கேணல் சூசை. (ஐ-3)

8% வருடமொன்றுக்கு

உங்களது நிலையான வைப்புகளுக்கு தேசிய சேமிப்பு வங்கி உச்சக்கட்ட வட்டியை இப்போது வழங்குகிறது. அருகிலுள்ள தே.சே.வ கிளைக்கு விரையுங்கள்.

NSB

# இனப்பிரச்சினைக்கு இதயசுத்தியுடன் சந்திரிகா தீர்வுகாண்பார் என நம்பவில்லை

## எரிக் சொல்ஹெய்மிடம் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவிப்பு

கொழும்பு,நவ.10

இலங்கை இனப்பிரச்சினைக்கு இதய சுத்தியுடனும், நேர்மையுடனும் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி குமாரதுங்க எடுப்பார் என்று நாம் நம்பவில்லை. ஜனாதிபதி குமாரதுங்க மீதோ அவரது அரசின் மீதோ எங்களுக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை.

- இப்படி நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்திருக்கின்றனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள்.

நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு வந்து சேர்ந்த எரிக் சொல்ஹெய்மை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் நேற்றுக்காலை கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகத்தில் சந்தித்தனர். அப்போதே அவர்கள் மேற்கண்டவாறு தமது நம்பிக்கையீனத்தை வெளியிட்டனர்.

அந்தச் சந்திப்பின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எரிக் சொல்ஹெய்முக்குக் கூறியதாவது:-

தேங்கிக் கிடக்கும் அமைதிப் பேச்சுக்களைத் தாமதமின்றி உடன் ஆரம்பிக்க வேண்டும். தவறினால் பல பிரச்சினைகள், சிக்கல்கள் எழும். பேச்சை ஆரம்பிக்காமல் இழுத்தடித்தால் யுத்தநிறுத்தமே தாக்குப்பிடிக்க முடியாத மோசமான நிலைமை ஏற்படலாம்.

அமைதி முயற்சிகளை - சமாதான நடவடிக்கைகளை - மீள ஆரம்பிப்பதில் ஜனாதிபதி உறுதிப்பாட்டுடன் இருப்பவர் போலத் தெரியவில்லை. தன்னுடைய தனிப்பட்ட அரசியல் நலன்களை எட்டுவதற்காகத் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை வைத்துக்கொண்டு அதன்படியே அவர் செயற்படுகின்றார். அமைதி முயற்சிகளில் ஈடுபடும் இதய சுத்தியும், நேர்மையும், உறுதிப்பாடும் ஜனாதிபதியிடம் இல்லை.

இலங்கை இனப்பிரச்சினையில் கடந்த ஐம்பது ஆண்டு காலமாகப் பெரும்பான்மைச் சிங்கள அரசுகள் நடந்துகொண்ட போக்கில் இருந்து இந்த அரசும் மாறவில்லை. அதேமாதிரித்தான் நடந்துகொள்கின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடும் மாறாமல் அப்படியே உள்ளது. விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவை மையமாக வைத்துப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

வடக்கு - கிழக்கு மக்களின் மனிதாபிமானத் தேவைகள் உடன் நிறைவுசெய்யப்படவேண்டும். சிதைந்துபோன அவர்களின் வாழ்வைக் கட்டியெழுப்ப வேண்டும். அடிப்படைக் கட்டுமான வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அதற்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்துவது அவசியம். அதையே நாம் வலியுறுத்துகிறோம்.

கொடூரப் போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு அரசு உதவிசெய்யாவிட்டாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாவது நேரடியாக உதவி வழங்கி வந்தன. அதற்கும் இந்த அரசு வேட்டுவைத்துவிட்டது. அரசசார்பற்ற நிறுவனங்கள் பாதிப்புற்ற மக்களுக்கான தமது செயற்றிட்டங்களை அரசுக்கு முன்வைக்க வேண்டும் என்றும், அரசு அனுமதித்தால் மட்டுமே அவற்றை மேற்கொள்ள முடியும் என்றும் புதிய விதிமுறையை அரசு இப்போது நடைமுறைப்படுத்தியுள்ளது. இதனால், தொண்டர் நிறுவனங்களின் சுயாதீனப் பணியும் பாதிப்புறுவதோடு, பாதிப்புற்ற மக்களுக்கான உதவித்திட்டங்களும் தடைப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் கடந்த பொதுத்தேர்தலில் இடைக்கால நிர்வாகம் பற்றிய வரைவுக்கு அங்கீகாரமளித்து அதையே தமது ஆணையாக முன்வைத்துள்ளனர். எனவே, அதனை மையமாக வைத்துப் பேச்சுக்கள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும்.

- இப்படிக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் நோர்வேயிலிருந்து விசேடமாக வருகைதந்திருக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சின் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி சொல்பிறிலியன் அம்மையார், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-க)

# மகனை ஏற்றிவர சைக்கிளில் சென்ற குடும்பப் பெண் ஹண்டர் மோதிப் பலி!

## முரசுமோட்டையில் பரிதாப சம்பவம்

கிளிநொச்சி,நவ.10

முரசுமோட்டை மூன்றாம் யூனிற் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற ஹண்டர் வாகன விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

முரசுமோட்டை முதலாம் யூனிற்றைச் சேர்நத தர்மரட்ணம் - சிவானந்தினி (வயது - 30) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை நான்கு மணியளவில் முரசுமோட்டைப் பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்தில் கல்விகற்கும் தனது மகனை ஏற்றி வருவதற்காக இவர் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது ஹண்டர் வாகனம் மோதியது. அதன் சக்கரத்தில் நசியுண்டு அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார் என்று கூறப்பட்டது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்தையடுத்து ஆத்திரமுற்ற மக்கள் ஹண்டர் வாகனத்தை அடித்து நொருக்கினர்.

தமிழீழ காவல்துறையினர் உடனடியாக வாகனச் சாரதியைக் கைதுசெய்தனர். ஹண்டர் வாகனத்தையும் கிளிநொச்சி காவல்துறைப் பணிமனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய வாகனம் கிளிநொச்சிப் பகுதியில் வீதித்திருத்த வேலைகளை மேற்கொண்டுவரும் தென்னிலங்கையைச் சேர்ந்த தனியார் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-7-305)

## அளவுக்கு அதிகமாகச் சொத்துச் சேர்த்த குற்றச்சாட்டு:

# எஸ்.பி.திஸநாயக்கா கைதாகிப் பிணையில்!

கொழும்பு,நவ.10

லஞ்ச, ஊழல் திணைக்களத்தால் நேற்றுக் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அவர் அமைச்சராகப் பதவி வகித்த - 1994ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டுவரையான காலப்பகுதிகளில் சுமார் 2கோடியே 90லட்சம ரூபாவைத் தனது சட்டரீதியான வருமானத்துக்கு மிஞ்சிய வகையில் சேர்த்துள்ளார் என்ற குற்றச்சாட்டின் பேரில் லஞ்ச ஊழல் திணைக்களத்தால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இந்த விசாரணைகளின் முடிவில் நேற்று லஞ்ச ஊழல் திணைக்களத்துக்கு வரவழைக்கப்பட்ட அவர், அங்கு கைதுசெய்யப்பட்டார். பின்னர் இவர் கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரின் வழக்கை விசாரணைக்குட்படுத்திய கொழும்பு மஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிவான், அவரை ஒரு கோடிரூபா சரீரப்பிணையிலும், 25ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

எஸ்.பி.திஸநாயக்காவுக்கு எதிராகத் தாம் வழக்குத் தொடரவிருப்பதால் அவருக்குப் பிணை வழங்குவதில் தமக்கு ஆட்சேபம் இல்லையென லஞ்ச ஊழல் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்ததையடுத்தே நீதிவான் அவரைப் பிணையில் விடுவித்தார். (ஐ-க)

## ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு புதிய கட்டடத் தொகுதி

யாழ்ப்பாணம்,நவ.10

பம்பைமடுவில் உள்ள சித்த ஆயுள்வேத மாவட்ட வைத்தியசாலையில் ஒருகோடி 80 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடத் தொகுதி நிறுவும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


'காப்' திட்டத்தின் கீழ் இந்தக் கட்டடத் தொகுதிக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வார்ட் மற்றும் பார்மஸி என்பன புதிய கட்டடத் தொகுதியில் அமையவுள்ளதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் என். வர்ணகுலேந்திரன் தெரிவித்தார். (ஐ-164)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head Office
No.500, Galle Road,
Wellawatte,
Colombo - 06.
Tel.:2505632 - 3 Fax:2500626
Jaffna Office
No.86, PointPedro Road,
Jaffna. Tel.:021-2226242
Fax:021-2225600
Trinco Office
No.47, Kandy Road,
Trincomalee.
Tel.:026-2221519
Fax:026-2221519
கொழும்பு - யாழ். | யாழ். - கொழும்பு
Branch
No. 295, Jampettah Street,
Colombo-13 Tel.:2430782 Fax:2430782
(C/38614)







விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் நேற்று கிளிநொச்சியில் வந்து இறங்கிய பின்னர் எடுக்கப்பட்ட படங்கள்.

பாலசிங்கத்துடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கடற்புலித் தளபதி கேணல் சூசை, தளபதிகள் ஜெயம், ரமேஷ், விதுஷா, தமிழினி ஆகியோரும் காணப்படுகின்றனர். (ஐ-3)

உதயன்

# தீர்வா? திண்டாட்டமா? தீர்மானிக்கும் நேரம் இது

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது.

முக்கிய - அத்தியாவசிய - பொருள்களுக்கு உரிய மானியங்களை வழங்கமுடியாமல் இருப்பதால், உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவை அரசினால் கட்டுப்படுத்தவே முடியாது எனக் கைவிரித்துவிட்டார் வர்த்தக, வாணிப, நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. இதனைப் பகிரங்கமாகவே அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்கள் கடந்துவிட்டன. நாட்டைப் பொருளாதார ரீதியில் ஸ்திரப்படுத்த முடியாமல் அரசு திண்டாடுவது தெளிவாக - அப்பட்டமாக - வெளிப்படுகின்றது. அந்த வெளிப்பாடுகளில் சில:-

* பொருள்களின் விலை எக்கச்சக்கமாக எகிறியுள்ளது.
* ஒக்ரோபர் மாத விலைவாசி 12.2 வீதமாகப் பாய்ந்துள்ளது.
* ரூபாவின் பெறுமதி மிகமிக மோசமாக வீழ்ந்துள்ளது.
* அந்நியச் செலாவணிக் கையிருப்பு 23 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.
* சுமார் ஐயாயிரம் கோடி ரூபா (50 கோடி அமெரிக்க டொலர்) உயர் செலவுக் கடனாகப் பெறப்பட்டிருக்கின்றது.
* டொலர் நெருக்கடி கட்டுமட்டில்லாத பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவை தவிர, துண்டு விழும் தொகை வருட இறுதியில் பெரும் நிதியைக் கபளீகரம் செய்யக் காத்திருக்கின்றது. முன்னைய அரசினால் ஆரம்பிக்கப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்கள் - இவ்வாண்டில் நிறைவுபெற வேண்டியவை இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன. விவசாயம், கைத்தொழில் போன்றவை பாதிப்புற்று, நாட்டின் வளர்ச்சி வீதம் எதிர்த்திசையை நோக்கி நகரும் என்ற ஆபத்து எதிர்வுகூறல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடுகள் பலவும் உதவு தொகைகளை வழங்க முன்வராமல் பின்னடித்துவிட்டதால் பொருளாதாரத்துறையில் நாட்டின் எதிர்காலம் சூனியமாக - அந்தகாரமாகத் - தென்படுகின்றது.

போதாக்குறைக்கு, இலங்கை அரசின் பேரின வாத - பிடிவாத - போக்கினால் 'டோக்கியோப் பிரகடனத்தில்' உறுதியளிக்கப்பட்ட 45 ஆயிரம் கோடி ரூபா உதவுதொகையும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாதது போன்று தட்டுண்டு விழும் நிலைமை.

பொருளாதாரத்துறையிலும், இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் சமாதான நடவடிக்கைகளிலும் தெளிவான - நீதியான - யதார்த்தபூர்வமான - கொள்கைக் கோட்பாடுகளைக் கொண்டிராத பல்வேறு கட்சிகளின் கூட்டமைப்பை ஆட்சிப்பீடத்தில் ஏற்றிய குற்றத்திற்காக - தவறுக்காக - இந்தப் பொருளாதார நெருக்கடியை, பெரும் பளுவைச் சுமக்க வேண்டியவர்களாகியிருக்கின்றனர் இலங்கைத் தீவு மக்கள்.

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பதற்கான சமாதான நடவடிக்கைகளை ஆக்கபூர்வமான திசையில் முன் நகர்த்தினால் வெளிநாட்டு உதவிகள் வந்துசேரும் சாத்தியம் உள்ளது. இன்றைய பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கைத்தீவை மீட்சிபெறச் செய்வதற்கு ஒரேவழி வெளிநாட்டு உதவிகளைத் திரட்டி, சரியான கொள்கைத் திட்டங்களுக்கு அமைய நாட்டை வழிநடத்துவதுதான். ஆனால் அதுதான் கொழும்பின் மிகப்பெரிய குறைபாடு.

அமைதி நடவடிக்கைகளை மீளவும் ஆக்கபூர்வமான திசையில் நகர்த்துவதற்கான ஒரு வாய்ப்பு இன்று இலங்கைவரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனின் விஜயத்துடன் கிட்டுகின்றது. இதைச் சரிவரப் பயன்படுத்துவதும், அதனால் நாட்டுக்கு நல்ல பலனைப் பெற்றுக்கொடுப்பதும் இலங்கை அரசைப் பொறுத்தது.

பேரினவாதச் சகதிக்குள் சிக்குண்டு, அதன் காரணமாகச் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளை - அடிப்படை உரிமைகளை - மதிக்காமல் மிதித்து, நாட்டைக் குட்டிச்சுவராக்கி வரும் தனது கூட்டமைப்பின் சகாக்களைத் திருப்திப்படுத்துவதற்காக இலங்கை நாட்டின் தலைவி இப்போது கிடைக்கும் சந்தர்ப்பத்தையும் கோட்டை விடுவாராயின், இந்த நாட்டுக்கு மீட்சிக்கான வாய்ப்பு இனிமேல் இல்லாமலே போய்விடலாம்.

நாடா? இல்லை, தனது ஆட்சியை உறுதிப்படுத்துவதற்காகப் பேரினவாதக்கூட்டாளிகளைத் திருப்திப்படுத்துவதா? - எது முக்கியம் என்பதைத் தீர்மானிக்க வேண்டிய ஒரு முக்கியமான காலகட்டத்தில் இலங்கைத் தீவின் ஜனாதிபதி தற்போது இருக்கின்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தை அவர் சரிவரப் பயன்படுத்தினால் இலங்கைத்தீவு சுபீட்சத்தில் திளைக்கும். இல்லையேல், தீர்வின்றித் திண்டாடும். அதனால், அது துண்டாடப்படக்கூடிய சாத்தியங்கள் பெருகும்.

# யுத்தம் பாதித்த பகுதிகளில் இடைக்கால நிர்வாகத்தைத் தாமதமின்றி ஏற்படுத்துக

## தெற்காசிய ஊடகவியலாளர் வலியுறுத்து

கொழும்பு,நவ.10

இலங்கை வெகுஜன ஊடகங்கள் இனரீதியான தவறான கருத்துகளை ஏற்படுத்துவதற்கு இலகுவழிகளில் பங்களிப்பு செய்திருப்பதாகவும் சமாதான நடவடிக்கைகளுக்கு கட்சி சார்பற்ற முறையில் பங்களிப்புச் செய்வதற்கான பொறுப்பை இவை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் தெற்காசிய நாடுகளின் ஊடகவியலாளர்கள் இணைந்து நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென விடுதலைப் புலிகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அரசை வலியுறுத்திவரும் நிலையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துரிதமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துமாறும் இதற்கான பேச்சுக்கு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் பயனுள்ள பங்களிப்பை வழங்குமெனவும், தெற்காசிய சுதந்திர ஊடகச் சங்கம் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தெற்காசிய நாடுகளின் உள்நாட்டு மோதல்கள் தொடர்பான மூன்று நாள் மாநாட்டை தெற்காசிய சுதந்திர ஊடக சங்கம் கடந்த வாரம் கொழும்பில் நடத்தியது. இம்மாநாட்டின் முடிவிலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுக் கோரிக்கையும் விடுவிக்கப்பட்டது.

மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தில மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை அரசியல் நெருக்கடியானது இன்று இனமோதலாக வடிவமெடுத்து அரை நூற்றாண்டுக்கு மேலாக தீர்க்கப்படாமலுள்ளது. அத்துடன், இலங்கை அரசியலிலிருந்து சிறுபான்மையினங்கள் படிப்படியாக தூர விலத்தி வைக்கப்படுகின்றமையும் பல தசாப்தங்களாக நீடித்து வருகின்றது.

சுதந்திரம் கிடைத்த காலம் தொடக்கம் இந்நிலை காணப்படுகின்றது. சனத்தொகையில் குறிப்பிடத்தக்க இந்தப்பிரிவினர் அரசில் பாதியத்தைப் பாராட்ட முடியாத தன்மை காணப்படுகிறது. குறிப்பாகத தமிழ்ச்சமூகமானது இறைமை தொடர்பாக மீள் பேச்சுக்களை தமது அரசியல் தலைமைத்துவம் ஊடாக நிபந்தனைகளை முன்வைத்திருக்கிறது. ஆனால், ஏற்கனவே வடிவமைக்கப்பட்டிருக்கும் பெரும்பான்மையினரின் மேலாதிக்கத்தன்மை வாய்ந்த அரச அமைப்பை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பித்தால் இச்சமூகங்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியாது.

தனித்துவமான தமிழ் அரசியல் அடையாளத்தை வழங்கும் எல்லை வரையறைகளை வழங்கக்கூடிய மீள் எல்லை வரையறை செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு பிராந்தியத்தை உள்ளடக்கியதாக புதிய இலங்கையானது கட்டி யெழுப்பப்பட வேண்டும். அதேசமயம் இந்தப் பிராந்தியத்திற்குள் சகல இன சமூகங்களினதும் சமத்துவத்தன்மையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இடைக்கால கட்டத்தில் 2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்தமானது வலுப்படுத்தப்பட வேண்டும். தற்காலிக சமாதானம் மேலும் சீர்குலைந்து போகாமல் தவிர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (ப-203)

# பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் நியமனம்

## மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.மாவட்டத்தில் மக்கள் வங்கிக் கிளைகளில் தற்காலிகமாகப் பணியாற்றியவர்களில் இடைநிறுத்தப்பட்டவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மக்கள் வங்கயின் வடபிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கிக் கிளைகளில் பணியாற்றியவர்களில் சிலரைப் பணியிலிருந்து இடைநிறுத்தியமை தொடர்பாக விளக்கமளிப்பதற்கான செய்தியாளர் மாநாடு நேற்று மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக்கிளையில் இடம்பெற்றது.

அங்கு இது தொடர்பாக விளக்கமளிக்கையிலே மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் வங்கியில் காணப்பட்ட ஊழியர் வெற்றிடங்கள் கடந்த காலங்களில் நாளாந்தக் கொடுப்பனவுகள் அடிப்படையில் நிரப்பப்பட்டன. ஆனால், அத்தகைய நியமனங்களை இரத்துச் செய்து வேறு நிறுவனங்களின் உதவியுடன் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்யுமாறு தலைமைப்பீடம் சுற்றறிக்கை மூலம் பணிப்புரை விடுத்திருந்தது.

அதற்கமைய இங்கு நாளாந்த வேதனத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்களை உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் உதவியுடன் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவோர் முன்னர் பெற்றுக்கொண்ட சலுகைகளைவிட மேலதிக நேரவேலைக்கான கொடுப்பனவுகளைப் பெறல், அனுமதிக்கப்பட்ட ஓய்வு நாளை எடுத்தல் என்பவற்றுக்குத் தகுதியுடையவர்களாகின்றனர்.

எனவே, இங்கு தற்காலிகமாகப் பணியாற்றியவர்களை அவர்களுடைய நன்மை கருதிப் பணியிலிருந்து இடை நிறுத்தியிருந்தோமே தவிர வேறு எந்தக் காரணங்களுக்குமாக அல்ல - என்றார். (10-5)

# இருவேறு சம்பவங்களில் எரிகாயமுற்ற இருவர் வைத்தியசாலையில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,நவ.10

இருவேறு சம்பவங்களில் எரிகாயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த இருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் அங்கு உயிரிழந்தனர்.

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியிலுள்ள தொம்மைப்பிள்ளை அன்ரன் ஜெரால்ட் (வயது 25) என்பவர் பெற்றோல் மாக்ஸ் கொழுத்திய சமயம் அது வெடித்துத் தீப்பற்றியதால் கடந்த 24 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு 13 நாள்களின் பின் அங்கு உயிரிழந்தார்.

குருநகரைச் சேர்ந்த மேரி.நிரஞ்சினி (வயது 8) என்பவர் குப்பிவிளக்குத் தட்டுண்டு எரிந்ததில் கடந்த 24 ஆம் திகதி அனுமதிக்கப்பட்டு 13 நாள்களின் பின் அங்கு உயிரிழந்தார்.

சடலங்கள் மரண விசாரணையை அடுத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (10-15-51)

## 80 லட்சம் ரூபா செலவில்

# மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் கலாசார மண்டபம் அமைக்கப்படும்

## மாநகர ஆணையாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம்,நவ்.10

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு முன்பாக உள்ள யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் 80 லட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.நகரப் பகுதியை மையமாகக் கொண்டு அமைக்கப்படவுள்ள இந்தக் கலாசார மண்டபம் இரண்டு மாடிகளைக் கொண்டதாக நவீன முறையில் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான முழு நிதியையும் கலாசார அமைச்சு வழங்கவுள்ளது என்றார்.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அடுத்த ஆண்டு ஜனவரி மாத இறுதியில் இடம்பெறவுள்ளதாகவும், புனரமைக்கப்படவுள்ள கலாசார மண்டபத்தின் கட்டட வேலைகள் யாவும் அடுத்த ஆண்டுக்குள் பூர்த்தியாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (10-13)

### நாளை

ஐப்பசி 26
வியாழக்கிழமை
(11.11.2004)
திதி: சதுர்த்தசி
முன்னிரவு 10.11 வரை.
நட்சத்திரம் : சித்திரை
முற்பகல் 10.14
தீபாவளிப் பண்டிகை
சுபநேரம்: 7.36 - 9.06
ராகுகாலம்: 1.36 - 3.06
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

சந்தர்ப்பம் என்பது ஒரு சகதி நிலம். அதில் வழுக்கி விழாதவர்களே கிடையாது.

# அறநெறிப் பாடசாலையின் சைவசித்தாந்தப் பெருவிழா

யாழ்ப்பாணம்,நவ.10

இந்து, சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம், நீர்வேலி கணேசா அறநெறிப்பாடசாலையின் அனுசரணையுடன் நடத்தும் சைவசிந்தாந்தப் பெருவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலய திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மடத்தில் இடம்பெறவுள்ளது.

நீர்வேலி கணேசா அறநெறிப் பாடசாலைத் தலைவர் சிவஸ்ரீ கு.தியாகராயக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் ஆசியுரைகளை நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ சா.சோமதேவக்குருக்கள், நீர்வேலி கந்தசாமி கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இ.சுவாமிநாதக் குருக்கள் ஆகியோர் நிகழ்த்துவர்.

தொடர்ந்து 'மெய்கண்டாரும் சிவஞானபோதமும்' என்னும் தலைப்பில் இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் சு.செல்லத்துரையும், 'திருமுறைகளில் சைவசிந்தாந்தம்' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இளைப்பாறிய போதனாசிரியர் திருமுறைச் செல்வன் ச.விநாயகமூர்த்தியும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

தொடர்ந்து ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (10-202-72)


# திருமணப்பதிவு மேற்கொள்ளப்படும்

யாழ்ப்பாணம்,நவ.10

கொட்டடி கிராம அபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில் இலவசத் திருமணப் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

திருமணமாகி இதுவரை காலமும் திருமணப்பதிவைச் செய்யத்தவறியவர்கள் தங்கள் பெயர், விவரங்களை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் கொட்டடி சீனிவாசகம் வீதியிலுள்ள சங்கத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் இ.திருக்கருணை கேட்டுள்ளார். (10-202)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16 - 06 - 1949 | 11 - 02 - 2002 |

## அமரர் ஐயாக்குட்டி செல்வராசா

(சைக்கிள் ஓட்ட சாதனை வீரர், உதைபந்தாட்ட மத்தியஸ்தர்)

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய்
வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
சக்கடத்தால் சாதனை கண்டு ~ பெரும்
சரித்திரத்தில் புகழாய் நின்று
பந்தயங்கள் பலதை வென்று ~ இன்று
பாதியிலே பார்நீங்கிச் சென்றதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (10.11.2004) புதன்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மயிலணி வடக்கு,*
*சுன்னாகம்.* (சி-38948) (24-13-15)

நீங்காத நினைவுகளுடன்:
**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளை.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| குவலயத்தில் | குகமயத்தில் |
|---|---|
| 23 - 05 - 1921 | 11 - 10 - 2004 |

## திருமதி நேசம்மா சின்னத்துரை

அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும்
இலக்கணமாய் இருந்த பொக்கிஷமே!
தீபமாக விளங்கிடும் ஒளிவிளக்கே!
எங்கள் உள்ளங்களில் அணையாத ஜோதியே!

இன்று (10-11-2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சு.சண்முகநாதன்,
56/10, வளாக வீதி,
திருநெல்வேலி. (38468) (26-16-15-24)

*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்,*
*பூட்டப்பிள்ளைகள்.*

# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

கீழ்க்குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் கீழ்க் குறிப்பிடப்படும் நியமங்களுக்கு அமைய கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப் படுகின்றன. கேள்விகள் இச்செயலகத்தில் ரூபா 750/= மீளளிக்கப்படமுடியாத கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகள் 2004-11-23 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்களை 2004-11-09 ஆம் திகதியிலிருந்து 2004-11-20ஆம் திகதி வரை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை *"அரச அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப் பாணம்"* எனும் முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகத் திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்ட திட்டத்தின் பெயர் குறிப்பிடவேண்டும். காலதாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விவரங்களை மாவட்டச் செயலகப் புனர்வாழ்வு புனரமைப்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலையின் விவரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யப்படக் கூடிய தொகை | மீளளிப்புச் செய்யமுடியாத தொகை |
|---|---|---|---|
| தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கதலைமை அலுவலகம் புனரமைப்பு | M6 | 70,000/= | 750/= |
| யாழ்ப்பாண ப.நோ.கூ. சங்கக் களஞ்சியம் புனரமைப்பும், விரிவாக்கவும் | M8 | 12,000/= | 750/= |

**செ.பத்மநாதன்,**
அரச அதிபர், யாழ். மாவட்டம். (சி-38939) (26-13-15-24)

# விவாதச் சுற்றின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் நாளை

யாழ்ப்பாணம்,நவ.10

மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழுவினர் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்திய விவாதச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பட்டிமன்றக்குழுவின் அமைப்பாளர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசும் கௌரவ விருந்தினராகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.நாகராஜா, யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வின் முன்னதாக விவாதச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றி இறுதிப்போட்டிக்குத் தெரிவான வேம்படி மகளிர் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையே இறுதிப்போட்டி நடைபெறும்.

தொடர்ந்து ஆசி உரையினை முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார். வாழ்த்துரையினை திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் நிகழ்த்துவார். சிறப்புரைகளைத் தொடர்ந்து பரிசில்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.(10-13)

# தனியார் கடையில் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருட்டு!

வலி.கிழக்கு,நவ.10

தனியார் கடையொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இருபாலை, டச்சு வீதியில் உள்ள தி.சற்குணராசா என்பவருக்குச் சொந்தமான கடையிலேயே இந்தத் திருட்டுக் கடந்த 5 ஆம் திகதி இரவு இடம்பெற்றுள்ளது.

இரவு வேளையில் கடையின் பின் கதவைத் திறந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பால்மா வகைகள், இனிப்பு வகைகள், எண்ணெய் வகைகள் போன்றவற்றைத் திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை, அருகிலுள்ள வீட்டிலும் ஜன்னல் கம்பியை வளைத்து உள்நுழைந்த திருடர்கள் 5 ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர். (10-180-202)

# சுன்னாகம் மத்திய மருந்தகம் இன்றுமுதல் புதிய கட்டடத்தில்

யாழ்ப்பாணம், நவ.10

சுன்னாகம் மத்திய மருந்தகம் இன்று புதன்கிழமைமுதல் புதிய இடத்தில் புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

'நீர்ப்' திட்டத்தின்கீழ் சுமார் 30லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இப்புதிய கட்டடம் சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது.

நீண்டகாலமாக சொந்தக் கட்டடம் இன்றி இரு தனியார் வீடுகளில் இயங்கிவந்த இம் மருந்தகம் இப்பொழுது புதிய இடத்தில் இயங்கவுள்ளது.

இம்மருந்தகத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக டாக்டர் ம.சந்திரசேகரம் நியமிக்கப்பட்டுள்ளார். (10-202)

# மக்களுக்குச் சிரமம்!

கைதடி,நவ.10

செம்மணி வாய்க்காலில் நீராடும் இளைஞர் குழுக்களின் சேஷ்டைகளால் ஏ-9 வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வாய்க்காலில் தினமும் குளிக்க வரும் இளைஞர்களில் சிலர் மதுபோதையில் வருவதுடன் வீதியால் செல்லும் பயணிகளைக் கேலிசெய்து அவதூறாகப் பேசுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த வருடம் இதே வாய்க்காலில் இளைஞர் ஒருவர் மது போதையுடன் நீராடி உயிர் இழந்தமை குறிப்பிடத்தக்கது. (10-202-75)


## தேவை

கொம்பியூட்டர் தமிழ் ரைப்செற்றிங் தெரிந்தவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: விளம்பர இல.:2427,
மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-38799)



# தமிழ்நாடு கர்நாடக திருத்தல யாத்திரையும் சுற்றுலாவும்

தரிசிக்கும் தலங்களும் சுற்றுலா இடங்களும்

புட்டபத்தி பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபா தரிசனம், திருப்பதி, பெங்களூர், பெங்களூர் மகாராஜா மாளிகை, மைசூர் பிருந்தாவனம் சென்னை, மகாவலிபுரம், மெரினா பீச், காஞ்சிபுரம் காமாட்சியம்மன், ஏகாம்பரேஸ்வரர் வரதராஜபெருமாள், சிதம்பரம் நடராஜர், தில்லை காளி அம்மன், திருவாரூர் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி, பூம்புகார், குற்றாலம், நாமக்கல் ஆஞ்சநேயர் அன்னை வேளாங்கன்னி, பழனி, மதுரை மீனாட்சி ஆலயம், திருச்சி உச்சிப்பிள்ளையார், ஸ்ரீ ரங்கம், திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், வள்ளிக்குகை, நவக்கிரக கோயில்கள், திருத்தணிகை, பழமுதிர்ச்சோலை, சுவாமிமலை, இராமேஸ்வரம், கன்னியாகுமாரி, திருவேனி சங்கமம், குமாரி அம்மன் ஆலயம், காந்தி மண்டபம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம், திருவள்ளுவர் சிலை, கடலில் இயந்திரம் மூலம் சென்று பார்த்தல், திருவானைக்காவல் சிவன்கோயில், சமயபுர மாரியம்மன்.

- யாத்திரிகர்களுக்குச் சௌகரியமான விடுதிகளில் தங்குமிட வசதியும் முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களிலும் வழிகாட்டி துணையுடனான பிரயாணமும் உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.
- இத்திருத்தல யாத்திரை நவம்பர் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகும். 20ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- நியாயமான கட்டணம்.

அரிய வாய்ப்பு
15 Days
14 Nights

**Metro Travels & Tours (Pvt.) LTD**
4031/2, Galle Road, Wellawatta, Col.-06.
Tel.: 2362766, 2361937, Fax: 2361888

இலங்கை உல்லாசப் பிரயாண சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
(C/38957) (42-16-15-24)


# கேள்வி அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

| வேலையின் விவரம் | மீளளிப்புச் செய்யப் படக் கூடிய தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|
| பாடசாலைத் தளபாடக் கொள்வனவு | 43,600/- | 750/- |

மேலே குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான அரக்கு முத்திரையிட்ட கேள்விகள் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் இச்செயலகத்தில் ரூபா 750/- மீளளிக்கப்படமுடியாத கட்டணம் செலுத்திப் பெறப்பட்ட கேள்விப்படிவத்தில் இணைப்பிரதிகள் 2004.11.23 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் படிவங்களை 2004.11.09 ஆம் திகதியிலிருந்து 2004.11.20 ஆம் திகதிவரை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை இந்த அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகளை "அரச அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரியிட்டுப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகத் திட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடலாம். கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் "பாடசாலைத் தளபாடக் கொள்வனவு" எனக் குறிப்பிட வேண்டும். காலதாமதமாகச் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விவரங்களை மாவட்டச் செயலகப் புனர்வாழ்வு புனரமைப்பு அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செ.பத்மநாதன்,**
அரச அதிபர், யாழ். மாவட்டம். (சி-38938) (24-13-15)

# மரண அறிவித்தல்

## இராமலிங்கம் சண்முகலிங்கம்

B.Sc. Agriculture Eng.

*(முன்னாள் முகாமையாளர், Brown & Co., Collets co., சத்தியவதி – குருநாகல், கந்தளாய் சீனிக் கூட்டுத்தாபனம், அரன்கோ, பரந்தன், பிரதம விவசாயப் பொறியியலாளர், சாம்பியா)*

சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் சண்முகலிங்கம் அவர்கள் அமெரிக்காவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் கோயில் வீதி, நல்லூரைச் சேர்ந்த சுசீலாதேவி (அமெரிக்கா) அவர்களின் அன்புக் கணவரும் தயாளன் (அமெரிக்கா), சுதமதி (அமெரிக்கா), சிவமதி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு:
I.T.N.
Tamil Vation Org.
Search.R (38464) (24-13-15)

தகவல்:
சகோதரர்கள்
மகேந்திரலிங்கம் (கனடா),
சுந்தரலிங்கம் (உரும்பிராய்),
கணேசலிங்கம் (யாழ்ப்பாணம்),
பஞ்சலிங்கம (அமெரிக்கா).

# எப்போதும் உங்கள் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் மக்கள் வங்கி

இந்துக்களின் ஒளித்திருநாளான தீபாவளி தினத்தன்று கடந்த வருடத்தைப் போலவே இம்முறையும் மக்கள் வங்கியின் குறிப்பிடப்பட்ட சில கிளைகள் உங்களின் கொடுக்கல், வாங்கல்களுக்காக திறந்திருக்கும்.




தீபாவளி தினத்தன்று மக்கள் வங்கியிலுள்ள உங்களின் சேமிப்பு கணக்கில் ரூபா 15,000/= த்தினை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை ஒரு வருடத்திற்கு வைப்புச் செய்யும் போது இந்துக்களின் பாரம்பரிய கலாச்சாரத்தின் அடையாளமான ஓர் அழகிய பித்தளை விளக்கு உங்களுக்கு பரிசாக காத்திருக்கின்றது.

எமது பிரதான சம்பிரதாயபூர்வ தீபாவளி வைபவம் வெள்ளவத்தை மக்கள் வங்கி கிளையில் நடைபெறுவதுடன், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி ஆகிய கிளைகளிலும் விசேட வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எமது அனைத்து வாடிக்கையாளர்களையும் மேற்குறிப்பிடப்பட்ட கிளைகளில் ஒளித்திருநாளை கொண்டாட எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

அன்றைய தினம் திறந்திருக்கும் எமது ஏனைய கிளைகள்.

அட்டாளச்சேனை, அக்கரைப்பற்று, அம்பாறை, கல்முனை, காரைதீவு, மஹாஓயா, நிந்தவூர், பொத்துவில், சம்மாந்துறை, திருக்கோவில், உஹன, பதுளை, பண்டாரவளை, ஹப்புத்தளை, பசறை, ஜிந்துபிட்டிய, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், செட்டியார் தெரு, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை , தெஹிவளை (காலி வீதி), கம்பளை, கண்டி, மாத்தளை, ஹட்டன், மஸ்கெலிய, நுவரெலிய, இராகலை, தலவாக்கலை, உடபுஸ்ஸல்லாவ, பலாங்கொட, அச்சுவேலி, சாவகச்சேரி, சங்கானை, சுன்னாகம், யாழ்ப்பாணம் கன்னாத்திட்டிக்கிளை, யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி, காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, மன்னார், மாங்குளம், முருங்கன், முல்லைத்தீவு, பரந்தன், வவுனியா, மட்டக்களப்பு, மட்டக்களப்பு நகர், செங்கலடி, ஏறாவூர், களவாஞ்சிக்குடி, காத்தான்குடி, வாழைச்சேனை, கந்தளாய், கிண்ணியா, மூதூர், சேருவில், திருகோணமலை, திருகோணமலை நகர்.

# கொக்குவில் இ
# மாணிக்கம் – பாக்கியம் ஞ

## தர்மம் தலைகாக்கும்



"தவமும் தவமுடையார்க்கு" என்ற வள்ளுவப் பெருந் தகையின் கூற்று முற்றுமுழுதாகத் திருவாளர் மாணிக்கம் சுப்பிரமணியம் குடும்பத்தாருக்குச் சாலப் பொருந்தமானது. அவரின் செயற்பாடுகள் யாவும் பொன், பொருள், மாடு, கன்று, சுற்றம் யாவையும் ஒருங்கிணைந்த செயற்பாடே யாகும். தனது சுயமுயற்சியால் பற்பல செல்வங்களை சிறிய வயதிலேயே தேடியுள்ளார். அச்செல்வத்தினை நல்ல வழியில் பேணவும், செலவுசெய்யவும் கற்றுக்கொண்டார். அதனாலேதான் வள்ளுவர் கூற்று "தவமுடையார்க்கே" என்ற பதம் அவர்களிற்கு மிகப்பொருத்தமாகும்.

பூமியிலே கல்விமான்கள், புத்திஜீவிகள், பலசாலிகள், பணம் படைத்தோர்கள் அநேகம் பேர் தோன்றினார்கள்; சிலர் மறைந்தும்விட்டார்கள். மறைந்தவர்கள் இப்பூமிக்கு விட்டுச் சென்ற சொத்துக்கள் எவருக்கும் பிரயோசனப்படுத்தப்படாமல் உதாசீனப்படுத்தப்பட் டுள்ளதைக் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது.

செல்வந்த நிலை தோன்றியவுடன் நல்ல செயற்பாட்டுடன் கூடிய நல்ல தர்மச் செயல்களைச் செய்வதே அறிவுடையோர் செயலாகும்.

சில செல்வந்தரின் செல்வமானது சுடுகாட்டின் மத்தியில் மரப்பொந்திலிருந்த தேன் போல எவருக்கும் பிரயோசனப்படாது போய்விடுகின்றது. அப்படியான செல்வந்தரை நடுக்காட்டில் எறித்த நிலா என்றும் கடலில் பெய்த மழை என்றும் எங்கள் முன்னோர் வர்ணித்துள்ளனர். இது வர்ணனையல்ல உண்மையேயாகும்.

நற்சிந்தனையுடையோன் நல்லனவற்றையே சிந்திப்பான் என்பது யோகர் சுவாமி களுடைய பொன் வாக்காகும். திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் தனது செல்வத்தின் ஒரு பகுதியைத் தர்ம கைங்கரியங்களிற்கு ஒதுக்க வேண்டும் என்று எண்ணியபொழுதே மஞ்சவனப்பதி முருகன் அவரின் திருவுள்ளத்தில் புகுந்து சமயப் பணியாகத் தொடக்கி வைத்தார். அலங்கார வளைவு அமைத்தலே அவரின் முதல் பணியாக இருந்தது.

இவரின் அடுத்த பணி அறிவு சம்பந்தமானது. தான் கல்வி பயின்ற கொக்குவில் இந்துக் கல்லூரியின் இட நெருக்கடியினையும் ஏற்கனவே உள்ள கட்டடங்களின் அவல நிலையையும் நேரில் கண்ட இவர், பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவியர் களின் நலன் கருதியும் இந்து சமயத்தினதும் கொக்குவில் வாழ் மக்களின் நன்மை கருதியும் ஒரு சிறப்பான சிந்தனையின் வெளிப்பாடாகத் தனது குடும்பத்தாரின் உதவி யுடன் 160 X 25' அளவுடைய மூன்று மாடிக் கட்டடத்தினை அமைத்துத் தந்தமையை நாம் எப்படிக் கூறுவது. புகழுக்குச் செய்தாரா? புண்ணியத்திற்குச் செய்தாரா? என்று சிந்திப்போமேயானால் எதுவுமில்லை. ஓர் உண்மை புலப்படும்.

ஏழு அடி உயரமுள்ள மனிதர் உயர்ந்த மனிதர் அல்ல. சகல பரீட்சைகளிலும் சித்தியடைந்து தராதரப்பத்திரங்களை வைத்திருப்பவர்கள் எல்லோரும் கல்விமான்களு மல்ல. பல கோடி பணத்திற்கு அதிபதியானவர்கள் எல்லோரும் செல்வந்தர்களுமல்ல. அப்படியானால் யார் பெரியவர்கள்?

செயற்கரிய செயல் செய்வார் பெரியார், என்றே கூற வேண்டும். இதனையே வள்ளுவர்

"ஊருணி நீர் நிறைந்தற்றே யாம்
பேரறி வாளன் திரு"

ஒரு நல்லறிவு படைத்தவனின் செல்வமானது ஊருக்கு மத்தியில் இருக்கின்ற குளம் போன்றது. அங்குளத்தினால் வயல்கள், தோட்டங்கள் போன்றவை வளரும். மக்களும் விலங்கினங்களும் தத்தமது தாகங்களை போக்கிக்கொள்ளும். இது போன்றே நல்லறிவு படைத்தவர்களின் செல்வமும் தேவைப்பட்ட அனைவருக்கும் பயன்படும்.

எமது மூதாதையினர் எமக்கு பற்பல நல்வழிகளைக் காட்டியிருக்கின்றனர். அவர்கள் வழி பின்பற்றி திரு.சுப்பிரமணியமும் சென்றிருக்கின்றார். இவர், முதலில் ஆலய வேலை யையே தொடங்கினார். தொடர்ந்து கல்விச்சாலையினைத் திறம்பட முடித்துள்ளார். மேலும், கொக்குவில் கிராம மக்களின் தேக ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் ஒரு மருத்துவ நிலையத்தையும் நிறுவவுள்ளார். இவையெல்லாம் இவருடைய மதிநுட்பமும் செல்வத்தை செலவு செய்யும் வழிமுறையுமே ஆகும்.

நாவலர் பெருமான் தனது வாழ்நாள்களில் அதிகமாக மேற்கொண்ட கைங்கரியங் களாக –

பாடசாலை அமைத்தமை, மாணவர்களுக்கு நற்போதனை செய்தல், இந்து சமயத்தை அனுசரிப்பதற்கு வழிவகைகளைப் போதித்தல் போன்றவையாகும்.

எதிர்பாராமல் நற்காரியங்களைச் செய்ய முன்வருபவர்களைப் புறம் கூறும் சமூகமும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கின்றது. சமூகம் என்பது மாரித்தவளை போன்றது. வெள்ள நீரினை அருந்தி விட்டு, வாய் கிழியக் கத்திவிட்டு, வயிறு வெடித்து இறந்து விடும். இதுபோன்றே சேற்றிலே மலர்வதுதான் செந்தாமரை. செந்தாமரை மலரைப் பறிக் கும் மனிதன் அதன் அழகைத்தான் இரசிப்பான். சேறு என்னும் சமூகத்தை நோக்கான். இத்தகைய செந்தாமரை போன்றவர்தான் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள்.

வாழ்க்கை முறை பற்றிக் கூறிய கிருபானந்த வாரியார் மனிதனாகப் பிறந்தவன் பூக்கடைக்காரன் மாதிரி வாழப்பழகவேண்டும். கரிக்கடைக்காரன் மாதிரி வாழக்கூடாது என்றார். அதாவது, பூக்கடைக்காரன் மரத்திலிருந்து பூவை மட்டும் பறிக்கிறான். ஆனால், கரிக்கடைக்காரனோ மூலப் பொருளாகிய மரத்தையே அழித்து எரித்து வருமானம் பெறுகின்றான் என கிருபானந்தவாரியார் கூறுகிறார். இவற்றை எல்லாம் புரிந்து வாழாத சிலர் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்.

" ...... நெல்லுக்கும் உமி உண்டு
நீர்க்கும் நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்குண்டு"

என்கிறது நாலடியார். அதாவது நன்மையும் தீமையும் கலந்தவைதான் சமூகம். இப்படியான சமூகத்தில் தனக்கேற்பட்ட விமர்சனத்தையும் தாங்கி சமூகத் தொண்டு செய்பவர் தான் எம் பெரியார் உயர்திரு. சுப்பிரமணியம் அவர்கள்.

"பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்
மகட்டபதடி யெனல்"


என்கிறார் வள்ளுவர். ஒருவர் எத்தனை காலம் வாழ்ந்தார் என்பதிலும் பார்க்க எப்படி வாழ்ந்தார், எத்தகைய தர்மங்களைச் செய்தார். சமூகம் இவரிடமிருந்து எத்தகைய நன்மைகளைப் பெற்றது என்பதே முக்கியமானதாகும். மேலும்,


"வறியவர்களுக்கு ஒன்று ஈவதே ஈகை"

என்கிறார் வள்ளுவர். வறிய மாணவர்கள் கல்வி கற்பதற்காக திரு. சுப்பிரமணியம் பாடசாலை அமைத்துள்ளார். இதனால், மன நிறைவும் கொண்டார். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வைப்புச் செய்த பணத்தினை நீண்ட காலத்தில் நாம் மீளப் பெறும் போது அது எவ்வாறு பன்மடங்காகப் பெருகியிருக்குமோ அது போன்றதே நாம் செய்கின்ற காரியங்களும் எமக்கு இன்மைப் பயன் மட்டுமன்றி மறுமைப் பயனைத் தருவதுதான் அறம் என முன்னோர் கூறுகின்றனர். இதனை நன்கு உணர்ந்து வாழ்பவர்தான் திரு. சுப் பிரமணியம் அவர்கள்.

அறம் செய்வோர் தவம் செய்யத் தேவை இல்லை என்பர் முன்னோர். அதற் கிணங்க பல அறப்பணிகளை மேற்கொண்டு அவற்றில் ஒன்றாக பாடசாலையின் ஒரு தொகுதி கட்டடத்தினை அமைத்துத் தந்த உயர்திரு.சுப்பிரமணியம் குடும்பத்தினர் மேலும் தர்மச் செயல்களை மேற்கொள்ள எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகன் அருள் புரி வாராக.

இ.நடராசா
தலைவர், பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.



திற
நேரம் :
காலம் :

திரு. மா
அடிக்க

## எமது கல்லூரித்தாய் தந்த பாரி வள்ளல்



எமது கல்லூரியில் தற்போது நிமிர்ந்து நிற்கும் கல் லூரி நூற்றாண்டு மண்டபத்தை உருவாக்க உறுதுணை யாக இருந்தவர் வேறுயாருமல்லர். எமது கல்லூரியின் பழைய மாணவரும் தன்னை இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் அர்ப்பணித்துள்ள வள்ளல் திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் குடும்பத்தினர் ஆவர். சாதாரணமாக ஒருவர் ஒரு கட்டடத்தை நிறுவும் போது ஏனோதானோ என்று ஒரு கட்டடத்தை நிறுவுவர். ஆனால், வள்ளல் திரு.சுப்பிர மணியம் அவர்களோ கட்டடத்தின் ஒவ்வொரு பகுதியை யும் தானே தனது மனதிற்கு நிறைவாகும் வரையும் கட்டடத்திற்கு உயிர் கொடுத்திருக்கின்றார் என்றால் மிகையாகாது.

தற்போது பணம் படைத்தவர்கள் எத்தனையோ பேர் உள்ளார்கள். அவர்கள் ஏதோ செலவு செய்து அதை சமூகத்திற்குப் பிரயோசனமாகச் செய்யமாட்டார்கள். இதேநிலையில் எமது பழைய மாணவர் செய்த கைங்கரியம் இந்த நூற்றாண்டில் எந்த ஒரு பாடசாலையின் பழைய மாணவரும் செய்யாத ஒரு செயலாகும். இதை கொக்குவில் சமூகமும் பழைய மாணவர்களும் என்றென்றும் மறக்கமாட்டார்கள்.

மேலும் இக்கட்டடம் இவ்வகையில் முடிவுறுவதற்கு தன்னை முழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட எமது பழைய மாணவ சங்கத் தலைவர் பொறியியலாளர் திரு.நடராசா அவர்களை எமது பாடசாலைச் சமூகம் மனதில் நிலைநிறுத்தும் என்பதில் ஐயமில்லை. அதேபோல், செயலாளர் திரு.இ.செல்வநாதன் (நகுலன்), பாடசாலை அதிபர் திரு.பொ.கமலநாதன், இதை நிறைவாக்க பல சிரமங்களின் மத்தியில் நிர்மாணித்த ஒப் பந்தகாரர் திரு.ம.கெங்காதரன் அவர்களையும் எமது பழைய மாணவர்களும் பாடசாலைச் சமூகமும் மனதில் நிலை நிறுத்துவர் என்பதில் ஐயமில்லை.

இப்படிப்பட்ட பாரிய உதவியை எமது பாடசாலைக்கு மனமுவந்தளித்த வள்ளல் திரு.மா.சுப்பிரமணியத்தையும், அவர்கள் குடும்பத்தினரையும் பாடசாலைச் சமூகம் நினைவு கூர்வதோடு அவர்களது வாழ்வில் சிறப்புற்று எமது பாடசாலைக்கு உதவுவதற்கு எல்லாம் வல்ல கிருபாகரசிவசுப்பிரமணியர் அருள் புரிவதோடு, இக்கட்டடம் சம்பந்தமான மலர் சிறப்புற எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வுறுகிறேன்.

செ.செல்வகுமாரன் J.P.
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## எனது உள்ள



எல்லாம் வல்ல இறைவன் அருளால் கல்லூரி பூர்த்தியடைந்து இன்று திறப்புவிழா நடைபெறுவதையிட் உதவியோடு இக்கைங்கரியம் நிறைவேறியிருக்கிறது. இ தோன்றியது இன்று நேற்றல்ல. பாடசாலை மாணவ நனவாகியுள்ளது. இப்படியோர் எண்ணம் அன்று தீயவர்கள் எமது பாடசாலைக்குத் தீயை வைத்தார்கள் ஆண்களுக்கும் மாலையில் பெண்களுக்குமாகக் கல 3மாடிக் கட்டடம், பிற கட்டடங்கள் நிர்மாணிக்கப் சொல்லால் விவரிக்க முடியாது. அந்த நாள்களில் என் மனதில் தோன்றிய எண்ணம் எனது மனதில் உதயமாகிய இந்த நல்லெண்ணம் இலட்சியமாக மாறி பல வரு சந்தோசத்தால் துள்ளிவிளையாடுகிறது. அன்று மாணவர்களாகிய நாங்கள் அனுப அனுபவிக்காமல், எங்கள் ஊரை, நாம் பிறந்த மண்ணை இன்னும் மேன்நிலைக்கு உள்ளது. அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து முன்னேற்றுவது சகலரின்

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது முதுமொழி, என்ன விலை கொடுத் புகட்டுகிறது. கல்விக்கு அடுத்து விளையாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண பாப்பா என்று தனது பாப்பாப் பாட்டில் கூறுகிறார். கல்வியைப் போல் விளையாட் விளையாட்டுக்கும் நாம் எல்லோரும் எம்மாலியன்ற பங்களிப்பினை நல்கவேண்டும். தனது முழு நேரத்தையும் செலவழித்து, அழகிய கட்டடத்தை உருவாக்குவதற்கு இனிய நண்பர் இ.நடராசாவுக்கு எனது மனமார்ந்த நன்றியையும் அவருக்கு உறுது மற்றும் கல்லூரி அதிபர், முன்னாள் அதிபர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவ, நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றேன்.

## ஆசிச் செய்தி

கொக்குவில் இந்துடன் அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் நெருங்கிய தொடர்புடையவன் என்றவகையில் அன்றிலிருந்து இன்றுவரை இக்கல்லூரியில் தொடர்ச்சியாக நிலவிய பௌதிக வள, முக்கியமாக வகுப்பறை பற்றாக்குறை யினை நான் நன்கு அறிவேன். காலத்திற்குக் காலம் பதவியேற்ற அதிபர்கள் இக்குறையினை நிவர்த்தி செய்ய முயன்றும் நிலைமை முற்றாகச் சீர் செய்யப்படவில்லை.

ஃபஷன் ஹவுஸ்
இல. 65, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3034, 021 222 2197

இந்நிலையில்தான், வள்ளலார் மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களும் அவர் குடும்பத்தினரும் முன்வந்து இந்த நீண்டநாள் தேவையைப் பூர்த்திசெய்துள்ளனர். அவர் தனது பெற்றோரின் ஞாபகார்த்தமாக இம் மூன்று மாடிக் கட்டடத்தை அன்பளிப்புச் செய்த போதிலும் இது என்றும் அவரை எமக்கும் எமது வருங்காலச் சந்ததியினருக்கும் ஞாபகமூட்டிய வண்ணமிருக்கும். அவர்கள் என்றென்றும் வள்ள லாருக்குக் கடமைப் பாடுடையோராக இருப்பார்கள். வாழ்க அவர்களும் அவர்கள் தம் குடும்பமும்.

அ.பஞ்சலிங்கம்,
முன்னாள் அதிபர்.



## இலட்சிய

அன்பு, அறிவு, அறம், அடக்கம் என்பவற்றோடு ஆற்றலும் மிக்கவராக இ "மணியம்" அவர்களால் செயற்கரிய செயலை செய்துமுடிக்க முடிந்தது. எமது கல் மாடிக் கட்டடத்தை கட்டியெழுப்பி முடிக்க அதிபர்களான ஹண்டி பேரின்பநாயகம் அவர்களும் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை முழுவதும் சென்றும் அரச உதவியோ பூரணமாக்க முடிந்தது. அப்போது பட்ட கஷ்டங்கள் யாவும் அன்பிற்கினிய மாண மனதில் பதிந்துவிட்டது போலும்! அவரது இலட்சிய தாகம் இன்று இனிதே நிறை வேள்வியில் அவருக்கு உறுதுணையாகச் செயற்பட்ட தெய்வசித்தன் நடராசா(தல மகத்தானது. இந்தப் பணியில் 'நகுலன்' அவர்களது செயற்பாடு மிகவும் பாராட்டு பணியை செய்துமுடித்த மணியம் அவர்களின் குடும்பம் வளமான வாழ்வுபெற ஆ

சண்முகன் வர்த்தக நிலையம்
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.
T.P.: 021 222 5020, 021 222 2637

வளர்மதி உதிரிகள் வாணிபம்
இல.19, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 4590020, 0776019359

சீமாட்டி புடைவைக் கடல்
இல. 122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2196

கணேசன் சென்ரர்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
T.P.: 021 222 5708

BAT

# மீட்புநிதி கடன் மீளளிப்பு – 2004

யாழ்ப்பாணம்,நவ.10

தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்புச் செய்வதற்குத் தெரிவானோரில் கோப்பாய் (ஒரு பகுதி) உதவி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்தவர்களின் விவரம் வருமாறு:-

## கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| கோ/18 | கந்தையா கணேஸ்ஐயா |
| கோ/60 | நாகமுத்து நடராசா |
| கோ/72 | சின்னத்தம்பி பொன்னுத்துரை |
| கோ/107 | தம்பிமுத்து சரவணமுத்து |
| கோ/131 | திருமதி செல்லம் சின்னத்துரை |
| கோ/247 | சண்முகம் குமாரசுவாமி |
| கோ/271 | பொன்னம்பலம் செல்வரத்தினம் |
| கோ/296 | செல்வி திருஞானசோதி அருளம்பலம் |
| கோ/297 | கந்தப்பு இராசதுரை |
| கோ/321 | சின்னத்தம்பி வைத்திலிங்கம்பிள்ளை |
| கோ/499 | முத்தையா தணிகாசலம் |
| கோ/638 | கதிரன் கந்தையா |
| கோ/676 | நல்லான் மார்க்கண்டு |
| கோ/699 | கிருஷ்ணர் நாகலிங்கம் |
| கோ/709 | சூரன் பண்டாரம் |
| கோ/741 | சின்னப்பொடி இரத்தினசுவாமி |
| கோ/772 | வல்லிபுரம் சுப்பிரமணியம் |
| கோ/796 | குட்டித்தம்பி சிங்கை ஆரியரத்தினம் |
| கோ/933 | திருமதி நல்லம்மா சதாசிவம் |
| கோ/938 | சின்னத்தம்பி பாலன் |
| கோ/939 | நாகமுத்து பொன்னையா |
| கோ/1003 | கந்தையா செல்லத்துரை |
| கோ/1019 | கணபதிப்பிள்ளை தம்பையா |
| கோ/1023 | சிற்றம்பலம் தம்புச்சாமி |
| கோ/1032 | கார்த்திகேசு விசுவலிங்கம் |
| கோ/1035 | கதிரித்தம்பி கிருஸ்ணபிள்ளை |
| கோ/1038 | சின்னையா இராசநாயகம் |
| கோ/1041 | வட்டன் வயிரவன் |
| கோ/1047 | சண்முகம்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| கோ/1057 | கதிர்காமத்தம்பி சிவசம்பு |
| கோ/1072 | வேலுப்பிள்ளை சிற்சபேசன் |
| கோ/1073 | திருமதி தங்கரத்தினம் இராசையா |
| கோ/1088 | முருகேசு பொன்னையா |
| கோ/1144 | யோன் யோசேப் |
| கோ/1152 | கந்தையா கோவிந்தபிள்ளை |
| கோ/1163 | சபாபதி கணேசு |
| கோ/1174 | அப்பாத்துரை கணேசு |
| கோ/1200 | சுப்பிரமணியம் முத்துக்குமாரசாமி |
| கோ/1208 | சின்னக்குட்டி முத்துத்தம்பி |
| கோ/1214 | திருமதி முத்தாச்சி கனகரத்தினம் |
| கோ/1286 | திருமதி பருவதம் கந்தையர் |
| கோ/1304 | சிவகுரு இராசையா |
| கோ/1305 | இளையதம்பி காசிப்பிள்ளை |
| கோ/1330 | செல்லப்பா செல்லத்துரை |
| கோ/1340 | சேனாதிராசா சோமசுந்தரம் |
| கோ/1365 | வேலன் சீனிவாசகம் |
| கோ/1391 | இளையதம்பி சரவணமுத்து |
| கோ/1400 | இராமு சின்னத்துரை |
| கோ/1401 | சின்னப்பா செல்லத்துரை |
| கோ/1402 | சாமுவேல் வேலுப்பிள்ளை செபரத்தினம் |
| கோ/1416 | வயிரமுத்து சற்குணசிங்கம் |
| கோ/1449 | திருமதி தயாளம் இரத்தினாதிக்கம் |
| கோ/1505 | பொன்னையா கந்தையா |
| கோ/1510 | அப்பாப்பிள்ளை கந்தையா |
| கோ/1528 | திருமதி லட்சுமி தயானந்தம் |
| கோ/1562 | தம்பையா இராசேந்திரம் |
| கோ/1598 | இராமு சின்னத்தம்பி |
| கோ/1603 | வேலுப்பிள்ளை செல்லத்துரை |
| கோ/1644 | மாப்பாணர் தம்பாபிள்ளை |
| கோ/1657 | திருமதி அன்னபூரணம் முருகேசு |
| கோ/1675 | நமசிவாயம் குழந்தைவேலு |
| கோ/1700 | கதிரவேலு நடராசா |
| கோ/1706 | முத்துக்குருக்கள் பரமசாமிக்குருக்கள் |
| கோ/1724 | கார்த்திகேசு இரத்தினம் |
| கோ/1739 | சதாசிவம் சிவக்கொழுந்து |
| கோ/1743 | பொன்னையா சின்னப்பு |
| கோ/1750 | திருமதி சின்னப்பிள்ளை வேதவனம் |
| கோ/1760 | சின்னையா செல்லத்துரை |
| கோ/1786 | சிவக்கொழுந்து வயித்திலிங்கம் |
| கோ/1803 | சின்னப்பு கந்தையா |
| கோ/1820 | சின்னப்பு கந்தையா |
| கோ/1827 | பெரியதம்பி கணேசலிங்கம் |
| கோ/1848 | இராசமுத்து மயில்வாகனம் |
| கோ/1871 | விசுவநாதர் பொன்னையா |
| கோ/1905 | ஐயன் செல்லப்பா |
| கோ/1924 | குமாரு செல்லையா |
| கோ/1930 | திருமதி சிவசாமிப்பிள்ளை மாரிமுத்து |
| கோ/1934 | செல்லையா சுப்பிரமணியம் |
| கோ/1985 | பொன்னர் அப்புத்துரை |
| கோ/1990 | திருமதி அரியம்மா செல்லத்துரை |
| கோ/1991 | சரவணை பாலசுப்பிரமணியம் |
| கோ/2093 | திருமதி புவனேஸ்வரி கணேசலிங்கம் |
| கோ/2104 | வல்லிபுரம் இராசையா |
| கோ/2129 | சுப்பிரமணியம் தசரதன் |
| கோ/2153 | சிதம்பரப்பிள்ளை செல்லத்துரை |
| கோ/2246 | வேலுப்பிள்ளை கந்தவனம் |
| கோ/2311 | சின்னவன் ஆண்டி |
| கோ/2328 | கதிரன் கந்தையா |
| கோ/2341 | கதிரவேலு நடராசா |
| கோ/2344 | கதிரன் நாகமுத்து |
| கோ/2376 | கதிரன் சீனியன் |
| கோ/2411 | முருகேசு மாணிக்கம் |
| கோ/2418 | சிதம்பரம் பொன்னன் |
| கோ/2504 | தில்லையர் சுந்தரம் |
| கோ/2552 | கதிர்காமு வேலுப்பிள்ளை |
| கோ/2558 | வயிரமுத்து மயில்வாகனம் |
| கோ/2575 | காசி ஆசைப்பிள்ளை |
| கோ/2576 | செல்லத்துரை பாலசிங்கம் |
| கோ/2651 | திருமதி அழகரத்தினம் முருகேசு |
| கோ/2659 | இராமு மார்க்கண்டு |
| கோ/2679 | நாகலிங்கம் நடராசா |
| கோ/2744 | திருமதி சின்னத்தம்பி சாம்பசிவம் |
| கோ/2752 | சின்னட்டி சுந்தரம் |
| கோ/2805 | வேலுப்பிள்ளை செல்லத்தம்பி |
| கோ/2826 | பொன்னம்பலம் சின்னத்துரை |
| கோ/2832 | பரமு தேவராசா |
| கோ/2863 | திருமதி தெய்வானைப்பிள்ளை நடராசா |
| கோ/2865 | நாகமுத்து தம்பிராசா |
| கோ/2974 | திருமதி சிவகாமிப்பிள்ளை தியாகராசா |
| கோ/2979 | அருணாசலம் சிவானந்தன் |
| கோ/3017 | வேலுப்பிள்ளை தம்பிராஜா |
| கோ/3109 | திருமதி மகேஸ்வரி வெற்றிவேலு |
| கோ/3163 | திருமதி புவனேஸ்வரி கனகரத்தினம் |
| கோ/3207 | கார்த்திகேசு சிற்றம்பலம் |
| கோ/3239 | கந்தையா சுப்பிரமணியம் |
| கோ/3249 | திருமதி சிதம்பரேஸ்வரி குமாரசாமி |
| கோ/3257 | கந்தையா சிவஞானம் |
| கோ/3263 | முத்தையா சுந்தரம் |
| கோ/3283 | சுந்தரம் தர்மலிங்கம் |
| கோ/3303 | கார்த்திகேசு வல்லிபுரம் |
| கோ/3307 | திருமதி விஜயலட்சுமி சிவசங்கரநாதன் |
| கோ/3331 | சிவஞானம் கனகரத்தினம் |
| கோ/3334 | சின்னத்தம்பி கந்தையா |
| கோ/3338 | சின்னவன் குட்டியன் |
| கோ/3371 | அப்புக்குட்டி நல்லதம்பி |
| கோ/3413 | வேலுப்பிள்ளை சுந்தரம் |
| கோ/3428 | செல்லப்பா சிவசுப்பிரமணியம் |
| கோ/3435 | தம்பையா செல்லத்துரை |
| கோ/3495 | திருமதி தங்கரத்தினம் வெற்றிவேலு |
| கோ/3525 | செல்லையா கணேசசாமி |
| கோ/3593 | செல்லப்பா நடராஜா |
| கோ/3597 | இராமலிங்கம் நடராசா |
| கோ/3599 | சம்பந்தர் நாகலிங்கம் |
| கோ/3600 | இளையதம்பி நடராசா |
| கோ/3606 | திருமதி பாக்கியலக்சுமி பாலசிங்கம் |
| கோ/3612 | வேலுப்பிள்ளை பரமநாதன் |
| கோ/3626 | திருமதி இரத்தினேஸ்வரி இராசரட்ணம் |
| கோ/3647 | தம்பையா சுந்தரலிங்கம் |
| கோ/3693 | இராயேந்திரா தம்போல் |
| கோ/3836 | திருமதி மேரிஜோசபின்ராணி நீக்கிலாஸ் |
| கோ/3873 | திருமதி பூரணம்மா சரவணமுத்து |
| கோ/3914 | பொன்னம்பலம் சண்முகதாசன் |
| கோ/3958 | இளையதம்பி சின்னத்தம்பி |
| கோ/4007 | குட்டியர் வேலுப்பிள்ளை |
| கோ/4041 | ஆறுமுகம் கணபதிப்பிள்ளை |
| கோ/4061 | நாகமுத்து நல்லையா |
| கோ/4074 | கந்தையா இராமசாமி |
| கோ/4085 | கந்தையா சின்னத்தம்பி |
| கோ/4098 | இராமலிங்கம் செல்லத்தம்பி |
| கோ/4122 | இளையதம்பி வேலுப்பிள்ளை |
| கோ/4132 | சின்னையா ஆறுமுகம் |
| கோ/4169 | கணபதிப்பிள்ளை கதிர்காமு |
| கோ/4170 | இளையதம்பி கணபதிப்பிள்ளை |
| கோ/4176 | திருமதி குழந்தையார் கைலாயபிள்ளை |
| கோ/4248 | முருகேசு பெரியதம்பி |
| கோ/4299 | வைத்திலிங்கம் சுப்பிரமணியம் |
| கோ/4304 | சின்னத்தம்பி சுப்பிரமணியயம் |
| கோ/4321 | செல்லத்துரை சிவலிங்கம் |
| கோ/4357 | திருமதி வள்ளிப்பிள்ளை வீரசிங்கம் |
| கோ/4404 | பாலர் பொன்னம்பலம் |
| கோ/4411 | மயில்வாகனம் இராசரத்தினம் |
| கோ/4429 | கணபதிப்பிள்ளை சரவணமுத்து |
| கோ/4460 | ஆறுமுகம் தாணையா |
| கோ/4475 | விஸ்வலிங்கம் அம்பலவாணர் |
| கோ/4484 | கணபதி கந்தையா |
| கோ/4491 | குட்டியன் மாணிக்கம் |
| கோ/4499 | சிவகுருநாதன் இராஜதுரை |
| கோ/4507 | செல்லத்துரை சண்முகநாதன் |
| கோ/4523 | வைரவன் செல்லத்துரை |
| கோ/4570 | சுந்தரம்பிள்ளை சபாநயகம் |
| கோ/4607 | இளையதம்பி தம்பு |
| கோ/4613 | தங்கராஜா கஜமுகன் |
| கோ/4633 | கார்த்திகேசு குமரேசு |
| கோ/4643 | மயில்வாகனம் கந்தையா |
| கோ/4787 | வெள்ளையன் சங்கரப்பிள்ளை |
| கோ/4837 | கதிரவேலு சபாபதி |
| கோ/4868 | கனகசபை வேலுப்பிள்ளை |
| கோ/4876 | பூதத்தம்பி வீரசிங்கம் |
| கோ/4886 | திருமதி முத்தம்மா கணபதி |
| கோ/4888 | செல்வி விஜயலட்சுமி சிவகுரு |
| கோ/4906 | நல்லதம்பி கதிரமலை செல்லத்துரை |
| கோ/4929 | அரியகுட்டி அருளானந்தன் |
| கோ/4946 | கந்தையா சபாரெத்தினம் |
| கோ/4951 | அழகர் தாயுமானவர் |
| கோ/4985 | பண்டாரி கிட்டினர் |
| கோ/4996 | திருமதி குணமணி தர்மலிங்கம் |
| கோ/5005 | சுப்பர் நாகலிங்கம் |
| கோ/5021 | செல்லையா தில்லைநாதன் |
| கோ/5031 | முத்து மாணிக்கமுத்து மயில்வாகனம் |
| கோ/5047 | திருமதி தங்கம்மா ஆறுமுகம் |
| கோ/5178 | கனகசபை இரத்தினசபாபதி |
| கோ/5207 | நாகமுத்து சின்னத்துரை |
| கோ/5222 | திருமதி சோதிரத்தினம் பொன்னுத்துரை |
| கோ/5247 | திருமதி தவமணி சுப்பையா |
| கோ/5300 | சின்னத்துரை ஆனந்தகுமாரசாமி |
| கோ/5330 | ஐயம்பிள்ளை கந்தையா |
| கோ/5331 | கந்தையா கதிரவேலு |
| கோ/5365 | கோவிந்தபிள்ளை நடராசா |
| கோ/5366 | கணபதிப்பிள்ளை நிற்சிங்கம் |
| கோ/5381 | சுப்பிரமணியம் பொன்னையா |
| கோ/5404 | தம்புறிச்சேட் செல்வரத்தினம் |
| கோ/5441 | வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் |
| கோ/5450 | சுப்பிரமணியம் சின்னத்தமபி |
| கோ/5516 | நாகலிங்கம் கனகலிங்கம் |
| கோ/5521 | கணபதிப்பிள்ளை முத்துத்தம்பி |
| கோ/5547 | திருமதி பூரணம் சீனி |
| கோ/5569 | அழகரத்தினம் இரத்தினசிங்கம் |
| கோ/5585 | திருமதி சிவபாக்கியம் சுப்பையா |
| கோ/5591 | திருமதி சின்னம்மா நல்லையா |
| கோ/5594 | திருமதி சவுந்தரம் இராமலிங்கம் |
| கோ/5612 | ஆறுமுகம் சோமசுந்தரம் |
| கோ/5617 | திருநாவுக்கரசு சிவராசா |
| கோ/5619 | தில்லையம்பலம் தாமோதரம்பிள்ளை |
| கோ/5620 | கந்தையா தில்லையம்பலம் |
| கோ/5635 | கார்த்திகேசு தாமோதரம்பிள்ளை |
| கோ/5715 | ஞானப்பிரகாசம் விசுவாசம் |
| கோ/5759 | திருமதி கனகம்மா இரத்தினம் |
| கோ/5810 | கந்தையா பஞ்சலிங்கம் |
| கோ/5813 | அப்புக்குட்டி பூபாலசிங்கம் |
| கோ/5849 | சுப்பையா செல்லையா |
| கோ/5851 | செல்லையா சிவப்பிரகாசம் |
| கோ/5860 | இராமலிங்கம் சிவலிங்கம் |
| கோ/5862 | திருமதி சிவபாக்கியம் செல்லத்துரை |
| கோ/5863 | நாகன் செல்லன் |
| கோ/5884 | திருமதி தையலம்மா சோமசுந்தரம் |
| கோ/5893 | பொன்னையா அன்னலிங்கம் |
| கோ/5951 | சிவகுரு சிவபாதசுந்தரம் |
| கோ/5954 | சின்னையா அழகரத்தினம் |
| கோ/6032 | சின்னத்தம்பி பொன்னுத்துரை |
| கோ/6058 | திருமதி இரத்தினம்மா சுப்பையா |
| கோ/6068 | கந்தையா சுப்பிரமணியம் |
| கோ/6106 | சபாபதிப்பிள்ளை தம்பிராசா |
| கோ/6120 | செல்லையா விஜயரத்தினம் |
| கோ/6186 | திருமதி செல்லம்மா சின்னத்தம்பி |
| கோ/6192 | கந்தையா இராசையா |
| கோ/6222 | பாலகிருஷ்ணன் ஜெயதீஸ்வரன் |
| கோ/6226 | சிவசுப்பிரமணியம் விஜயகுமார் |
| கோ/6227 | திருமதி பசுபதியம்மா வேலாயுதம்பிள்ளை |
| கோ/6229 | சின்னத்தம்பி சபாரத்தினம் |
| கோ/6235 | அரியகுட்டி பத்மநாதன் |
| கோ/6240 | திருமதி அருணோதயம் இரஞ்சிதநாயகம் |
| கோ/6248 | திருமதி அன்னலட்சுமி குமாரசுவாமி |
| கோ/6251 | திருமதி தயாமணி அழகரட்ணம் |
| கோ/6408 | வைத்திலிங்கம் இராமசாமி |
| கோ/6447 | ஆர்.ஜெ.வல்லிபுரம் கனகரத்தினம் |
| கோ/6463 | சின்னத்துரை கெங்காதரன் |
| கோ/6474 | கந்தையா மார்க்கண்டு |
| கோ/6521 | கந்தையா தம்பிமுத்து |
| கோ/6572 | ஆறுமுகம் தம்பிமுத்து |
| கோ/6574 | திருமதி அன்ன்ப்பிள்ளை சுப்பையா |
| கோ/6591 | பொன்னர் சிவசம்பு |
| கோ/6652 | சின்னத்தம்பி குமாரவேலு |
| கோ/6661 | பண்டாரம் பழனிவேல் |
| கோ/6666 | செல்லப்பா சபாரட்ணம் |
| கோ/6682 | வேலுப்பிள்ளை கந்தசாமி |
| கோ/6690 | விசுவலிங்கம் கணேசலிங்கம் |
| கோ/6702 | திருமதி அன்னமலர் அருளம்பலம் |
| கோ/6766 | பொன்னையா செல்லத்துரை |
| கோ/6771 | நாகன் ஏரம்பு |
| கோ/6773 | சோமசுந்தரம் வீரசிங்கம் |
| கோ/6778 | அரியநாயகம் தங்கராசா |
| கோ/6997 | வயிரவிப்பிள்ளை சின்னத்துரை |
| கோ/7003 | திருமதி சின்னத்தங்கச்சி செல்லமுத்து |
| கோ/7044 | தம்பு கந்தசாமி |
| கோ/7066 | முருகேசு தம்பிராசா |
| கோ/7073 | கணபதிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி |
| கோ/7162 | தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை |
| கோ/7168 | மிசல்ஸ் சாள்ஸ் புஸ்பராசா |
| கோ/7180 | எலிபேத்பிள்ளைநாயகம் இராசரெத்தினம் |
| கோ/7196 | திருமதி விமலாதேவி அமுதலிங்கம் |
| கோ/7231 | திருமதி முத்துப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை |
| கோ/7242 | திருமதி தங்கம் சின்னத்துரை |
| கோ/7249 | சுப்பிரமணியம் அம்பலவாணர் |
| கோ/7260 | செல்வி கிறிஸ்ரிலலிதா ஞானம் |
| கோ/7273 | சண்முகம் சுப்பிரமணியம் |
| கோ/7278 | நரசிங்கம் சின்னத்தம்பி |
| கோ/7443 | திருமதி செல்லம்மா கனகரத்தினம் |
| கோ/7471 | திருமதி துரைச்சாமி செல்லம்மா |
| கோ/7476 | செல்லப்பா சபாரத்தினம் |
| கோ/7498 | சின்னத்தம்பி கந்தையா |
| கோ/7506 | ஆறுமுகம் நாகரத்தினம் |
| கோ/7534 | திருமதி அன்னரத்தினம் ஞானப்பிரகாசம் |
| கோ/7552 | திருமதி சிவக்கொழுந்து சின்னத்துரை |
| கோ/7564 | இளையதம்பி பெஞ்சமின் |
| கோ/7566 | கணபதிப்பிள்ளை அருணாசலம் |
| கோ/7608 | திருமதி பாக்கியம் சுப்பிரமணியம் |
| கோ/7644 | கந்தையா நடராசா |
| கோ/7661 | கந்தர் கணபதி |
| கோ/7667 | திருமதி இராசம்மா செல்வநாயகம் |
| கோ/7669 | கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை |
| கோ/7683 | ஐயாத்துரைக்குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் |
| கோ/7711 | கந்தையா குமாரவேலு |
| கோ/7767 | இளையதம்பி நடராசா |
| கோ/7777 | திருமதி முத்தம்மா சங்கரப்பிள்ளை |
| கோ/7779 | சின்னப்பு இரத்தினம் |
| கோ/7798 | திருமதி இரத்தினம் பூரணச்சந்திரன் |
| கோ/7826 | பெரியதம்பி நடராசா |
| கோ/7836 | திருமதி நாகம்மா செல்லத்துரை |
| கோ/7837 | திருமதி அன்னபூரணம் செல்லையா |
| கோ/7879 | திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் |
| கோ/7895 | விஸ்வலிங்கம் முத்துவேலு |
| கோ/7932 | திருமதி நாகமுத்து தம்பன் |
| கோ/7933 | திருமதி சிவக்கொழுந்து சுந்தரம் |
| கோ/7953 | கந்தையா கனகலிங்கம் |
| கோ/8037 | தம்பிமுத்து இராசரத்தினம் |
| கோ/8054 | திருமதி இலட்சுமிப்பிள்ளை தம்பிமுத்து |
| கோ/8061 | திருமதி செல்லம்மா வீரசிங்கம் |
| கோ/8065 | முருகுப்பிள்ளை செல்லத்துரை |
| கோ/8094 | திருமதி சின்னம்மா கதிரேசு |
| கோ/8111 | திருமதி புவனேஸ்வரி கார்த்திகேசு |
| கோ/8183 | திருமதி வேலுப்பிள்ளை பாக்கியம் |
| கோ/8247 | சின்னட்டி சின்னவன் |

(தொடரும்)

ஆனைக்கோட்டையில்

# 30 முதியவர்களுக்கு அடையாள அட்டை

ஆனைக்கோட்டை கிராம சேவையாளர் பிரிவிலுள்ள 30 முதியோர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பான நிகழ்வு முதியோர் சங்கத் தலைவர் கீதபொன்கலன் தலைமையில் கிராம சேவையாளர் வை.சந்திரராசாவின் அலுவலகத்தில் நடைபெற்றது. (எ-6-100)

## மனப்பூர்வமான மகிழ்ச்சியுரை



எங்களின் பெருமதிப்புக்குரிய
தொழில்சார் தோழன்

**சதாசிவம் கனகசபை**

அவர்களுக்கு பிரித்தானியாவில் கௌரவ D.Sc.(CULE) என்ற விஞ்ஞானக் கலாநிதிப் பட்டமும் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் கௌரவ D.Eng.(SWUA) என்ற பொறியியல் கலாநிதிப் பட்டமும் வழங்கப்பட்ட செய்தி அறிந்து பெருமை அடைகின்றோம்.

கலாநிதி **கனகசபை** அவர்கள் தனது ஆழ்ந்த பரந்த அறிவையும், ஆற்றலையும், மதிநுட்பத்துடன் பிரயோகித்து இலத்திரன் - தொலைத்தொடர்பியல் மற்றும் பொறியியல் - விஞ்ஞானக் கல்வி கற்பித்தல் துறைகளின் முன் நகர்வுகளுக்கு அளப்பரிய பங்களிப்புகள் செய்தவர். அன்னார் கனவான் மற்றும் மனித நேயப் பண்புகளுக்கமைய அர்ப்பணிப்புடன் தொழில் புரிந்தவர். ஆதலினால், பொறியியல் தொழில்சார் நிபுணர்களுடைய சிபார்சுகளின் அடிப்படையில் இரட்டைக் கலாநிதி (Double Doctorate) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார். எனவே, அரை நூற்றாண்டு காலமாக கலாநிதி கனகசபை அவர்களின் தொழில்சார் தோழர்களாக இருக்கும் நாங்கள் எங்களுடைய மனப்பூர்வமான மகிழ்ச்சியுரையை அவர்களுக்கு வழங்கிப் பாராட்டுகின்றோம். வயதுமுதிர்ந்த நிலையிலிருக்கும் எங்களின் பேரன்புக்குரிய தோழர் கலாநிதி கனகசபை அவர்கள் மனநிறைவுடன் நிம்மதியாக இறுதிக்காலத்தைக் கழிக்க இறை அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

Professors: **E.W.Davidson, J.M.Mevey, S.C.Scaulan & G.E.Potter.**
Doctorates: **M.P.Cooper, N.F.Paul, Mrs.M.J.Roberts & D.G.Paul**
Engineers: **E.M.Stanley, Miss B.H.Lee, V.J.Mendis & C.T.Lingam.**

On behalf of the professional colleagues in Britain and other E.E.C. Countries.
38, Hill Rise,
Greenford,
Middlesex, UB6 8PF, U.K.

(38433)(34-11-16)

## மாவீரரின் பெற்றோரை தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

வலி.வடக்கு,நவ.10

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டத்தில் வதியும் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களை நல்லூர் வைமன் வீதியில் அமைந்துள்ள அரசியல்துறைப் பணிமனையுடன உடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாவீரர் நாளில் மாவீரர்கள் துயிலும் இல்லங்களுக்கு அழைத்து செல்வது சம்பந்தமான முன் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதனால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-86)

## திருட்டு முயற்சிகள் முறியடிப்பு

கோண்டாவில்,நவ.10

கோண்டாவில் வடக்கில் கடந்த வாரம் இடம்பெற்ற இருவேறு திருட்டு முயற்சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

கோண்டாவில் அன்னங்கைப் பகுதியில் நண்பகல் அளவில் வீட்டுக் கூரைக்குப் போடப்பட்டிருந்த பனை மரங்களை கழற்றிக் கொண்டிருந்த வேளையில் இரண்டு பேரை அப்பகுதி விழிப்புக்குழுவினர் கையும்மெய்யுமாகப் பிடித்தனர்.

விழிப்புக்குழுவினர் மூலம் தகவலறிந்த கோப்பாய் பொலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, திருடர்கள் இருவரையும் கைதுசெய்து பொலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

மற்றைய திருட்டுச் சம்பவத்தில் திருடர்கள் இரவுவேளையில் யன்னல் கம்பியை உடைத்து அறையினுள் நுழைய முயற்சித்தவேளை வீட்டுக்காரர் உசாரடைந்ததையடுத்து தப்பியோடி விட்டனர். (எ-49)

## அகதிமுகாம்களுக்குள் வெள்ளம் புகுந்தது

யாழ்ப்பாணம்,நவ.10

வலி.தென்மேற்கில் பெய்த கடும் மழை காரணமாக நவாலி அட்டகிரி நலன்புரி நிலையம், மானிப்பாய் பிப்பிலி நலன்புரி நிலையம், நவாலி புலவர் முகாம் பகுதி ஆகியவற்றில் வதியும் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

முகாம்களைச் சுற்றி வெள்ளம் நிற்பதாலும்-சில முகாம்களின் குடிசைகளுக்குப் பாதுகாப்பான கூரைகள் இன்மையாலும் இவர்கள் மழை காரணமாக பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை -

நவாலி வடக்கு வளர்மதி வாசிகசாலை பகுதி மற்றும் நவாலி நாச்சிமார் ஆலயப் பகுதி வீடுகளிற்குள் வெள்ளம் புகுந்துள்ளது. (எ-6-185)

## வைத்தியசாலை வளாகவில் மழை வெள்ளம்

ஏழாலை,நவ.10

தெல்லிப்பழை வைத்தியசாலை தற்போது இயங்கிவரும வளாகத்துக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்பதனால் நோயாளர்களும் நோயாளர்களைப பார்வையிட வருவோரும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வைத்தியசாலையின் வாயிற்புறம், வெளிநோயாளர் பிரிவு, சைக்கிள் பாதுகாப்பு நிலையம் ஆகிய பகுதிகளிலேயே மழை வெள்ளம் தேங்கி நிற்கின்றது. (எ-6-45)

## திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஐப்பசித் திங்கள் 28 ஆம் நாள் (13.11.2004) சனிக்கிழமை காலை 10.45-11.00 மணிவரையிலுள்ள பிரதமைத் திதியும் சித்தயோகமும் அனுஷ நட்சத்திரமும் கூடிய மகர லக்கின சுபமுகூர்த்த வேளையில்





எமது கனிஷ்ட புதல்வன் திருநிறை செல்வன்
**வைத்திலிங்கம் (லிங்கம் - B.A.Hons.)**
(ஆசிரியர், மு/பாண்டியன்குளம் ம.வி.)

எமது புதல்வி திருநிறை செல்வி
**சுஜந்தி (சுஜி - B.A.Hons.)**
(ஆசிரியை, கிளி/செல்வாநகர் அ.த.க.பாடசாலை)

ஆகிய இருவருக்கும் இறை அருள் கூட சுன்னாகம் கதிரமலைச் சிவன்கோயில் திருமண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் சூட பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதராக வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு உபசாரம்: மணமகன் இல்லத்தில் 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை, மணமகள் இல்லத்தில்:15.11.2004 திங்கட்கிழமை.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

திரு.திருமதி மூத்ததம்பி சின்னத்தங்கம் தம்பதிகளின் பிள்ளைகள், மருமக்கள்.
நி.முகவரி: சாயுடை, மாவிட்டபுரம்,
த.முகவரி: நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

திரு.திருமதி பத்மநாதன் குடும்பம்
'வேலவளவு'
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 - 07 - 1915 | 12 - 10 - 2004 |

திருமதி **பத்மாவதி பொன்னுத்துரை**

செந்தாமரை நாயகியாம் திருமகள் போல் வாழ்ந்தவளே!
சொந்தங்கள் கதறியழ நீ சென்ற இடம்தான் ஏதம்மா?
பந்தபாசமெல்லாம் பட்டென்று அறுந்ததுவோ?
நந்தாவிளக்கே நாம் மறவோம் உன்னையே!

"முருகவில்லா",
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

- **குடும்பத்தினர்.**

(38417)(34-11-16)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 - 11 - 1947 | 12 - 11 - 1993 |

**சின்னையா பத்மராஜா**

ஆண்டுகள் பதினொன்று ஆயிடினும்
ஆறுதில்லையே எங்கள் அன்பு மனம்!
மீண்டும் ஒருமுறை உமது முகத்தைக் காண
விரும்புகின்றோம் வருவீரோ எம்மிடத்தில்.

பத்மராஜா அன் சன்ஸ்
நகைத்தொழிலகம்.
பிரதான வீதி, சங்கானை.

**மனைவி, பிள்ளைகள்.**

(37946)(34-11-16)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவர் அடியில் |
|---|---|
| 08 - 05 - 1945 | 10 - 11 - 2003 |

அமரர் **இராமநாதன் ஜெயசிங்கம்**

(Attorney at Law, Notary Public J.P.U.M. and Commissioner of Oaths)

இறைவன் உவக்கும் இனிய நறுமலராய்!
எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்!
சுற்றத்தின் மல்லிகை முற்றமாய்!
சட்டவாதிகளுக்குச் சிந்தனைச் செல்வனாய்!
ஏழைகளுக்கு என்றும் உதவிடும்
உபகாரியாய்!
எல்லோரும் போற்றும் சந்தன விருட்சமாய் வாழ்ந்து
பொல்லாத விபத்தில் சொல்லாமல் பிரிந்த எம் ஆலயமே!
ஆண்டு ஒன்று கடந்து விட்டாலும்
இன்று நடந்தது போல் இருக்கிறது உங்கள் பிரிவு
ஆறாத் துயரத்தில் அழுது கலங்குகின்றோம்.

*உங்களின் ஆன்மா நித்திய சாந்தியடைய*
*எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

36, சந்தனமாதா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

(38418)(34-11-16)


The Wardrobe
t-shirt showroom
149/1, Kasthuriyar Rd, Jaffna.
Tel: 077 77 55 037
(38455)(29-11-17)

Vilka T- Shirts களை பரிசளிப்பதன் மூலம் உங்களின் உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகளுடன் தீபாவளியைக் கொண்டாடுவோம்.
Vilka T-Shirts களை அணிவதன் மூலம் நீங்களும் மக்களால் அங்கீகரிக்கப்படுவதுடன் எங்களின் வளர்ச்சியிலும் பங்கேற்கிறீர்கள்.



(C/38611)

பண்டிகைக்கால அதிரடி SALE
கண்ணைக் கவரும் புத்தம் புதிய சாறிவகைகள், ஏராளமான ஆண்,பெண்
சிறுவர், சிறுமியர்களுக்கான புதியதோர் உலகம்!
ஒருமுறை வந்து பாருங்கள்!
ரூபா 3000/= இற்கு மேலாகக் கொள்வனவுசெய்கின்ற
ஆண்களுக்கு ஓர் அழகிய சேட்
பெண்களுக்கு ஓர் அழகிய பிளவுஸ் } பரிசு!

# ...இந்துக் கல்லூரி

## ...ஞாபகார்த்த நூற்றாண்டு மண்டபம் -2010



### திறப்பு விழா

நேரம் : பி.ப. 4 மணி
காலம் : புதன்கிழமை
10.11.2004

திரு. மா.சுப்பிரமணியம்
அடிக்கல் நடுகிறார்.

## அதிபரின் வாழ்த்துச் செய்தி



கொக்குவில் இந்துக் கல்லூரி கல்விப் புலத்தில் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளமை யாவரும் அறிந்ததே. தகை சார்ந்த மாணவர்களை உருவாக்கிய, உருவாக்கும் பெருமை இக்கல்லூரிக்கு உண்டு. இதற்கு இங்கு கல்விகற்ற மாணவர்கள் சான்றாக விளங்குகின்றனர்.

தமது அறிவுக்கண்ணைத் திறந்த கல்லூரி அன்னையை என்றும் மறவாமல் நாளும் பொழுதும் சிந்தித்து கல்லூரி அன்னைக்கு அர்ப்பணம் செய்யும் பழைய மாணவர்களின் பாங்கு அற்புதமானது. அந்தவகையில், கொக்குவில் இந்து அன்னையிடம் கல்வி பயின்ற திரு. மாணிக்கம் சுப்பிரமணியம் குடும்பத்தினர் தமது பெற்றோரின் ஞாபகார்த்தமாக மூன்று மாடிக்கட்டடத்தை அமைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள்ளனர்.

தனியொருவராக இருந்து சகல வசதிகளும் பொருந்திய மூன்று மாடிக் கட்டடத்தை பெருமளவு பெறுமதியில் நிர்மாணித்து அன்பளிப்புச் செய்வதென்பது ஒரு சாதாரண விடயமன்று. பணத்தோடு பணத்தைச் சேர்த்து, பகட்டு வாழ்க்கை வாழ நினைக்கின்ற இன்றைய யதார்த்த சூழ்நிலையில் இப்படியும் ஒரு வள்ளல் தன்மையா? என்று பலரும் வியந்து போற்றுமளவிற்கு திரு.மாணிக்கம் அவர்களின் பரோபகாரம் வானுயர்ந்துள்ளது.

இவரின் வள்ளல் தன்மையினால் கொக்குவில் இந்துக்கல்லூரியின் பௌதிக வளங்களில் ஒன்றான கட்டடத் தேவை நிறைவு செய்யப்பட்டுள்ளது. "....கோடி புண்ணியம் ஏழைக்கு எழுத்தறிவித்தல்...." என பாரதி உலகிற்கு உரைத்த தத்துவத்தை திரு.சுப்பிரமணியம் குடும்பத்தினர் செயலுருவில் செய்து காட்டியுள்ளனர். தன் மைந்தனின் அர்ப்பணிப்பு, உவந்தளிக்கும் உயர்ந்த உள்ளம் கண்டு கொக்குவில் இந்து அன்னை பூரிப்படைகின்றாள்.

"கற்ற தொழுகு" என்ற தாரக மந்திரத்தைத் தன் மைந்தன் தரணியில் நிலைநிறுத்திய செயல் கண்டு இறும்பூதெய்துகின்றாள் எமது கல்லூரித்தாய். இவரின் வள்ளல் தன்மை "சொல்" அல்ல "செயலே" பெரிதென்ற தத்துவத்தை மாணவ சமூகத்திற்கு உணர்த்தியுள்ளது.

இவர்களது உயர்ந்த பரோபகாரத்திற்கு அவரோடு உறுதுணையாக நின்று ஒத்துழைத்த அவரின் துணைவியார் திருமதி மாலதி சுப்பிரமணியம் அவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து மகிழ்கின்றோம். இவர்கள் செய்த இந்த நற்பணி மூலம் தமது பரம்பரைக்குக் கோடி புண்ணியத்தைத் தேடிக்கொண்டுள்ளார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னோர் உத்தமருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். திரு.சுப்பிரமணியம் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கிய இளைப்பாறிய பொறியியலாளர் திரு.இ.நடராசா அவர்கள். அவரிடம் காணப்பட்ட திறமை, ஆளுமை, சமூகத்தின் மத்தியில் கொண்டிருந்த நன்மதிப்பு என்பன எமது கட்டடம் நிறைவாக அமைவதற்குத் துணையாக விளங்கின. இவருக்கு உறுதுணையாக எமது கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.இ.செல்வநாதன் அவர்கள் செயற்பட்டுள்ளார். இவர்கள் செய்த உதவிகள் காலத்தால் அழியாதவை. கட்டட வேலைக்கான ஒப்பந்தத்தினைச் செய்துகொண்ட திரு.கெங்காதரன் அவர்கள் சிறிது தாமதம் ஏற்படுத்திய போதும் அர்ப்பணிப்புடன் நல்ல முறையில் நிறைவு செய்து தந்துள்ளார். இவருக்கும் எமது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரியின் அழகிற்கு அழகு சேர்க்கும் மாணிக்கம் பாக்கியம் ஞாபகார்த்த மூன்று மாடிக்கட்டடமும் அதன் கீழ்த்தளத்தில் அமைந்திருக்கும் சுப்பிரமணியம் அரங்கும் மங்கலகரமாகத் திறந்துவைக்கப்படும் இந்நாளில் எமது மன்முவந்த ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து, கல்லூரியின் வளாகத்துடன் வீற்றிருக்கும் கிருபாகரச் சிவசுப்பிரமணிய சுவாமிகளின் திருவருள் சுப்பிரமணியம் குடும்பத்தினருக்கும், கல்லூரிக்கும் என்றும் கிடைக்கப்பிரார்த்திக்கின்றேன்.

பொ.கமலநாதன்,
அதிபர்.

## நன்றி நயத்தல்



ஈழவளத் திருநாட்டின் வடபால் யாழ். நகரை அண்மித்த சைவமும், தமிழும் செழித்தோங்கும் கொக்குவில் என்னும் பதியில் கொக்குவில் இந்துக்கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரியின் ஓர் அங்கமாக நவீன வசதிகளுடன் புதிய மூன்று மாடிக்கட்டட நிர்மாணம் அழகுமிகு தோற்றத்தோடு பூர்த்தியடைந்துள்ளது. இக்கட்டடத்தை அமைக்கும்பொழுது எத்தனையோ எதிர்நீச்சல்கள் போட்டு நிறைவு செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டபொழுதும் மனவுறுதி தளராமல் இம்முயற்சியில் ஈடுபட்டவர்களின் செயற்பாடுகளினால் இக்கைங்கரியம் ஆண்டவனின் அனுக்கிரகத்துடன் இனிது நிறைவேறியது.

அமரர்களான மாணிக்கம் – பாக்கியம் தம்பதிகளின் ஞாபகார்த்தமாக அவர்களது குடும்பத்தினரின் நிதியுதவிகளின் பயனாக நிர்மாணிக்கப் பெற்றது இந்த நூற்றாண்டு மண்டபமாகும். எம்மாணவர்களின் கல்வித்தேவைகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு, வசதிகளுடன் உருவாக்கப்பட்ட ஒரு கலைக்கூடமாகவும் மிளிர்கின்றது. உலகத்திலே சமூகத்துக்குச்செய்யும் மிகவுயர்ந்த பணி கல்விப் பணியாகும். "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல் அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்பதற்கிணங்க எமது பிள்ளைகள் கல்வி கற்று அறிவாளிகளாகவும் ஆற்றல் உள்ளவர்களாகவும் வையத்தில் சிறப்புற வாழ இவ்வறிவாலயத்தை உருவாக்கிய பெருந்தகை உயர்திரு. மாணிக்கம் பாக்கியம் மகன் சுப்பிரமணியம் அவர்களின் குடும்பத்தைத் தமிழ்கூறும் நல்லுலகம் என்றுமே மறக்கமாட்டாது. இப்பிறவியின் பயனாக கிடைத்த செல்வத்தை இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படக்கூடிய அறப்பணிகளில் ஒன்றான கொக்குவில் இந்துக் கல்லூரியின் புதிய மூன்று மாடிக்கட்டடத்தை உருவமைத்த மாணிக்கம் – பாக்கியம் சுப்பிரமணியம் குடும்பத்தின் பெயர்கள் கொக்குவில் இந்துக்கல்லூரியின் வரலாற்றில் பொறிக்கப்படவேண்டியவை. இக்கட்டடம் போன்று யாழ். மாவட்டத்தில் வேறு எங்கணும் வானுயர்ந்து நிற்கும் கம்பீரமான கலைக்கூடத்தைக் காணமுடியாது. இவ்வளவு பிரமாண்டமான மண்டபத்தை அமைத்த குடும்பங்களின் பெருங்குணங்களை வாயாரப் போற்றுவோம். "தம்பொருள் என்ப தம் மக்கள் அவர் பொருள் தம் தம் வினையால் வரும்" என்ற திருக்குறளின் கருத்துப்படி மக்கள் தேடிய பொருள் பெற்றோர்களுக்குச் சந்ததியினருக்கு சென்றடையும் என்பதற்கிணங்க இச்செயல் யாவும் அவர்களின் குடும்பங்களைச் சென்றடையும். இவர்கள் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறை யும் தெய்வங்களாகப் போற்றப்படுவார்கள். கல்லூரியின் காலங்கள் வரை இவர்கள் நாமங்கள் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

இக்கல்லூரியின் புதிய மாடிக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு ஆலோசனையும் ஆக்கபூர்வமான நெறிப்படுத்துகையும் வழங்கிய முன்னாள் அதிபர் திரு.அ.பஞ்சலிங்கம் அவர்களையும், சங்கத்தினால் எடுக்கப்படும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் முன்னாள் அதிபர் திரு.இ.மகேந்திரன் அவர்களையும் இம்மாடிக்கட்டடம் உருப்பெறுவதற்கு செயற்படுவதை இக்கல்லூரியின் அதிபர் திரு.பொ.கமலநாதன் அவர்களையும் கொக்குவில் இந்து வாழ் மக்கள் என்றுமே மறக்கமாட்டார்கள். அவர்கள் பணி மக்களின் மனங்களில் என்றும் நிலைத்திருக்கும். மேலும் இம்மூன்று மாடிக் கட்டடம் உருப்பெறுவதற்கு முழுநேரத்தையும் அர்ப்பணித்த எமது பொறியியலாளர் திரு.இ.நடராசா அவர்களையும் கல்விச் சமூகம் என்றுமே மறக்கமுடியாது. அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து இன்னும் பல பணிகள் செய்ய ஆண்டவன் அருள்பாலிப்பாராக. மேலும் இப்பணி சிறப்புறத் தொண்டாற்றிய பழைய மாணவர்கள், கல்லூரி அபிவிருத்தியில் பங்காற்றியவர்கள் அனைவரின் ஒத்துழைப்பாலும் விரைவாக இப்பணி பூர்த்தியடைந்தமையால் அவர்கள் அனைவருக்கும் நன்றிகள் உரித்தாகுக. இக்கட்டடம் சிறப்புற அமைவதற்குச் செயல்புரிந்த கட்டட ஒப்பந்தகாரர், குறிப்பாக திரு.ம.கெங்காதரன் பணியாளர்கள், வேலையாள்கள் அனைவருக்கும் உள்ளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இம்மலரில் வெளிவர ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், பாராட்டுச்செய்திகள் வழங்கிய பெருந்தகைகளுக்கும் இம்மலர் சிறப்பாக வெளிவர இணைப்பாளராக இருந்து செயற்பட்ட எங்கள் கல்லூரியின் பகுதித் தலைவரும் ஆசிரியருமான திரு.மு.வேலாயுதபிள்ளை அவர்களுக்கும் மற்றும் எல்லாவழிகளிலும் செயல்புரிந்த அனைவருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

இ.செல்வநாதன் (J.P.)
(நகுலன்)
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி.

## ...உள்ளத்திலிருந்து...

...ன் அருளால் கல்லூரி அன்னைக்கு ஒரு காணிக்கையாக நூற்றாண்டு மண்டபம் ...ழா நடைபெறுவதையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். எனது குடும்பத்தினரின் ...நிறைவேறியிருக்கிறது. இப்படியொரு நற்பணியினை செய்வதற்கு எனது உள்ளத்தில் ... பாடசாலை மாணவனாக இருந்தபோது மனதில் ஏற்பட்ட ஒரு கனவு இன்று ... எண்ணம் அன்று ஏற்பட்டதற்கு ஒரு காரணமாய் அமைந்த சம்பவமொன்று ...த் தீயை வைத்தார்கள். விளைவு, ஒழுங்காக வகுப்பு நடத்தமுடியாமல் காலையில் ...பண்களுக்குமாகக் கஷ்டப்பட்டு வகுப்புக்களை நடத்தினார்கள். காலப்போக்கில் ...டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அந்தக் காலகட்டத்தில் நாங்கள் பட்ட கஷ்டம் ...ல் தோன்றிய எண்ணம்தான் இன்று நூற்றாண்டு மண்டபமாகக் காட்சியளிக்கிறது. ...பமாக மாறி பல வருடங்களுக்குப் பின் நிறைவேறியதையிட்டு எனது உள்ளம் ...கிய நாங்கள் அனுபவித்த துன்பங்களை தற்கால, வருங்கால மாணவர்களும் ...ன்னும் மேன்நிலைக்கு கொண்டுவருவது மாணவ சமுதாயத்தின் கைகளில் தான் ...ர்னேற்றுவது சகலரின் கடமையாகும்.

... என்ன விலை கொடுத்தும் கல்வியைப் பெறவேண்டுமென்ற உண்மையை நமக்குப் ...த்துவம் கொடுக்கவேண்டும். கவிச்சக்கரவர்த்தி பாரதியார் கூட ஓடி விளையாடு ...ப் போல் விளையாட்டும் மாணவர்களுக்கு இன்றியமையாத ஒன்று, ஆகையால் ...பினை நல்கவேண்டும். இக்கட்டடத்தை உருவாக்குவதற்கு இரவு, பகல் பாராது ...தை உருவாக்குவதற்கு துணைபுரிந்த திருப்பளிச்செம்மல் பொறியியலாளர், எனது ...யும் அவருக்கு உறுதுணையாக இருந்த செயலாளர் செல்வநாதன் அவர்களுக்கும் ...சிரியைகள், மாணவ, மாணவிகள், கட்டட ஒப்பந்தகாரருக்கும் எமது மனமார்ந்த -

- அன்பன் மா.சுப்பிரமணியம்.

## ...சிய தாகம்



...றலும் மிக்கவராக இருப்பதால்தான் அன்பிற்கினிய ... முடிந்தது. எமது கல்லூரியின் முதலாவது மூன்று ...றண்டி. பேரின்பநாயகம் அவர்களும் சி.கே.கந்தசாமி ...ன்றும் அரச உதவியோடுதான் அக்கட்டடத்தைப் ... அன்பிற்கினிய மாணவன் 'மணியம்' அவர்களின் ... இன்று இனிதே நிறைவேறியுள்ளது. அந்த அற்புத ...வசித்தன் நடராசா(தலைவர்) அவர்களின் சேவை ...ாடு மிகவும் பாராட்டுதற்குரியது. இந்த வரலாற்றுப் ...மான வாழ்வுபெற ஆண்டவன் அருள் புரிவாராக.

இ.மகேந்திரன்
(முன்னாள் அதிபர்)

## அனைவர்க்கும் வேலன் கருணை செய்வான்

திருவோங்கும் கொக்குவில் பதியில் கல்விச்
சீரோங்கும் இந்துக்கல்லூரித் தாயின்
உருவோங்கு நூற்றாண்டின் நினைவு தாங்கும்
உயர்வோங்கும் வானோங்கும் மண்டபத்தை
தருவோங்கும் சுப்பிரமணி யப் பேராளன்
தவமோங்கும் மாணிக்கம் – பாக்கியப்பேர்
மருவோங்கு பெற்றாரின் ஞாபகத்தின்
மகிழ்வோங்க அமைத்தளித்தான் கலைகள் பொங்க

நன்மனத்துச் சுப்பிரமணியத்தின் நோக்கில்
நலம்படைத்த கல்லூரி மண்டபத்தை
பொன்மனமத்துப் பழையமா ணவரின் சங்கம்
புகழ் பூக்கப் பாடுபட்டு வண்ணம் பூக்க
முன்முகமாய்க் கல்லூரி வளர்ந்துநிற்க
முறைமுறையாய் ஆக்குவித்தார் இதற்குழைத்த
இன்முகத்தார் அனைவருக்கும் எல்லாம் வல்ல
எழில் வேலன் கருணை செய்வான் வாழி! வாழி!

கலாநிதி அருட்கவி
சீ.விநாசித்தம்பி M.A.

## வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



தமிழ் மக்களின் கல்விப்பாரம்பரிய உருவாக்கத்தில் முக்கிய இடத்தை வகித்த திண்ணைப்பள்ளிக் கூடங்கள் இன்று வளம் பொருந்திய கல்விச்சாலைகளாகக் காட்சி தருகின்றன.

அரசுகளினதும், வள்ளல்களினதும் ஈகை இந்த மண்ணில் கல்வியின் மகத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது.

"கொடை" என்பது பல்வகைப்படினும், கல்விக்கு வழங்கப்படுகின்ற கொடையானது இவ் வையகத்தில் மானிடம் உயர்வு பெறச் செய்யும்பெரும் பணியாகும். அவ்வகையில், அந்த உயரிய பணியை கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான திரு.மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்கள் செய்துள்ளார்.

தான் கல்வி பயின்ற கல்லூரிக்கு மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத்தை அமைத்துக்கொடுத்ததன் மூலம் அவரின் வள்ளல் தன்மை வான் புகழ் கொண்டுள்ள து.

"பெற்றதாயும், பிறந்த பொன்னாடும்...." என்ற வரிசையில் தாம் கற்ற கல்லூரியையும் நோக்கும் சீரொழுக்கம் நம் மண்ணில் உண்டென்பதை திரு.மா.சுப்பிரமணியம் அவர்களின் "கல்விக்கொடை" உறுதிசெய்கின்றது. அவரின் வள்ளல் தன்மையால் தமிழ் அன்னை பூரிப்படைகிறாள். யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியம் மேலும் ஒருபடி ஏற்றம் காண்கின்றது.

ஆற்றல் மிகு அறிவியலாளர்களை உருவாக்கம் செய்யும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அதன் பழைய மாணவர் திரு.மா.சுப்பிரமணியம் அவர்கள் கையளிக்கும் கட்டடம் சகல வகைகளிலும் பொலிவுற்று புகழ் குவிக்க வாழ்த்துகின்றேன்.

ப.விக்னேஸ்வரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

இ.ச.பேரம்பலம் அன் கோ
இல.50,52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2988

SELVAMS
BATTERY SALES & SERVICES
443, K.K.S.Road,
Jaffna.

அன்னை தொழிலகம்
இணுவில்.
T.P: 021 - 222 - 3565

சாந்தி புடைவை அகம்
இல.157,158, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2045

மங்களா
வீட்டுத் தளபாட நிலையம்
153, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3080

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## தேவை

இரண்டுபேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைகளில் உதவக்கூடிய 30 வயதிற்கு உட்பட்ட பெண்ணொருவரை/பொறுப்புகளற்ற சுகதேகியான தாயொருவரை எதிர்பார்க்கிறோம். தொடர்பு: இல.13/2, இராமநாதன் வீதி (சிவகுரு கடை லேன்), யாழ்ப்பாணம். 021 222 6236 தினமும் பி.ப. 4மணி தொடக்கம் 7மணி வரை. (38494)

மூவர் கொண்ட குடும்பம் வசிப்பதற்கு யாழ்ப்பாணத்துக்கு அண்மையான பகுதிகளில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு:
T.P. 0773 086784 (வேறு ஆள்களுடன் தனி அறைகளும் விரும்பத்தக்கது). (38463)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

கறுப்பு நிற பாக் (Bag) ஒன்று புளியங்குளம் சோதனை நிலையத்தில் யாழ்ப்பாணம் நோக்கிவந்த வானில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும். J.S.R. ரேடியோ சென்ரர், 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (38442)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம்செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரா வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (38316)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும சில்லறையாகவும் வேண்டிய நிறையில் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: றாஜீவ - கால்நடைத் தீவன விற்பனை நிலையம்- சண்டிலிப்பாய், றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.T.P.:222 2867, 222 3529. (38425)

## தவறிவிட்டது

மட்டுவிலைச் சேர்ந்த காசிநாதன் பங்கைய வதனி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (845792607V), விசேட அடையாள அட்டையும் (091008793) யாழ். பஸ்நிலையத்துக்கும் ஆரியகுளத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 222 5657 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (38438)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,கொக்குவில், பிறவுண் வீதியில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக, சுமார் எட்டு(8)ப் பரப்பு விஸ்தீரணம் கொண்ட வெறுங்காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:T.P.222 5805. (38462)

## மணமகள் தேவை

யாழ்.இந்து, கௌரவ குடும்பத்தைச் சேர்நத, அவிட்ட நட்சத்திரம், 4 ஆம் பாதம, 1970 இல் பிறந்த, பிரபல வர்த்தகரான மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை. படம், ஜாதகத்துடன் தொடர்பு: விளம்பர இல. 2428, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38413)

## முகவர்கள் (AGENT) தேவை

பிரபல காப்புறுதி நிறுவனத்துக்கு யாழ்ப்பாணம், பரந்தன், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து முகவர்கள் (Agent) தேவை.

தகைமைகள்:
★ 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண்
★ க.பொ.த.சா/த. சித்தி
★ அரசசேவையில் கடமைபுரிபவர்களும் மற்றும் கடமையில் இருந்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 18.11.2004

இந்நிறுவனத்தின் கிளைநிறுவனம் மிக விரைவில் நெல்லியடியில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பதையும் அறியத்தருகிறோம்.

தொடர்பு:
**விளம்பர இல.: 2429, மே/பா உதயன்.**
(38459)(34-15-19)

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,நவ.10

அரியாலை, செம்மணிப் பகுதியில் ஏ-9 வீதியில் ஹண்டர் - ஓட்டோ ஆகியன விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் நணபகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஓட்டோவைச் செலுத்தி வந்தவரான சாவகச்சேரியைச் சேர்ந்த தங்கராசா சரத்பாபு (வயது 20) என்பவரே காயமடைந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுகொண்டிருந்த ஹண்டரும், யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த ஓட்டோவும் விபத்துக்குள்ளாகின. ஓட்டோ சேதத்துக்குள்ளானது. (எ-12-31-6)


# மாபெரும் சிறப்புத் தள்ளுபடி

**ராசி சில்க்ஸ் நல்லி சில்க்ஸின் இணைந்த சேவை**

உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகல வகையான சாறிகள், பஞ்சாபி அன் சோளிகள், சிறுவர்கள் இளையவர்களுக்கான றெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும் இன்றே வாருங்கள்

**இத்தள்ளுபடி 7 ஆம் திகதிமுதல் 11 ஆம் திகதிவரையும்**

NOTE: எமக்கு யாழ் நகரில் ராசி சில்க்ஸ்,நல்லி சில்க்ஸ் தவிர்ந்த வேறு கிளை ஸ்தாபனம் எதுவும் இல்லை

**ராசி சில்க்ஸ்**
70, 71A, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம். 021 - 222 5571

**நல்லி சில்க்ஸ்**
121/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021 - 222 5573



அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

# G.S.லிங்கநாதன் அன் கோ

வாடிக்கையாளர்களே!

தீபத்திருநாளாம் தீபாவளியை முன்னிட்டு புத்தம்புதிய சாறி, சேட் வகைகளை உங்களுக்காக அறிமுகப்படுத்துகின்றோம்.

**சாறி வகைகள்.**

✦ சமர் பலஸ்
✦ அமிற்றா
✦ லேடி பேட்
✦ விமு
✦ கோகினூர்
✦ வேல்ட் பியூட்டி
✦ லண்டன் பியூட்டி
✦ மோஸ்ட் வோன்டட்
✦ டிசைன்
✦ ஸ்பிறிங்லர்
✦ கில்லி
✦ றுசிகா
✦ பஷன் ஷோ
✦ ஆட்டோகிறாப்
✦ நைனாறிசி
✦ ஸ்ரோன் கோல்ட்
✦ மிளக் கோல்ட்
✦ ரீன்.ஏஜ். லவ்வர்
✦ பஷன் இன்டியா (ரிசு)
✦ லவ் லான் கூச்
✦ சில்வர் எபெக்ற்
✦ ஓசன் ஜோர்ஜட்
✦ ஆஷிமா
✦ சினேகா Two-D சில்க்
✦ நவீனா
✦ ஒமேகா சில்வர் மிக்ஸ்போடர் (ஜரி)
✦ பஷன் கோல்ட்
✦ டிஸ்கோ ராணி
✦ சிக்னெற்றி
✦ ஏதேன்ஸ்
✦ லுக் - மி
✦ புளு-ஐஸ்
✦ ரச் மி
✦ சில்வர் லிப்ஸ்
✦ லிட்டில் காட்
✦ எம்புறொய்டர் ஜரி சில்க்

(சி-38907) (24-15-19-34)

**சேட் வகைகள்:**

✦ ஜென்னி S/S ✦ கொன்ஸ்ரன் S/S ✦ பயர் L/S ✦ றோமன் L/S ✦ மக்னாகாட்டா S/S
✦ றொமான்ரிக் L/S ✦ அசாறோ L/S ✦ யட்றியர் L/S ✦ கார்லன் S/S ✦ மன்செஸ்ரர் L/S
✦ லுயிஸ் பிலிப் L/S ✦ ஜோன் னொடீல் L/S ✦ மான்டோ S/S ✦ றோத்மன் L/S ✦ லான் செஸ்ரர் L/S

மற்றும் நவநாகரிக உலகுக்கேற்ற திருமணப் பட்டுப் புடைவைகள், சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைகள், பஞ்சாபி – சல்வார் வகைகள், றெடிமேட் ஆடைகள் அனைத்தையும் தெரிவுசெய்ய தரம் நாடுவோர் நாடும் சிறந்த ஸ்தாபனம்:

**G.S.லிங்கநாதன் அன் கோ G.S.LINGANATHAN & CO**

13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P.: 021 222 3139 13,14, Grand Bazaar, Jaffna.


# நன்றி தெரிவிக்கின்றோம்



8.11.2004 உதயன் பத்திரிகையில் 38423ஆம் இலக்கத்தில் பிரசுரமான "தவறிவிட்டது" என்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட 7 பவுண் நிறையுள்ள தாலிக்கொடியைக் கண்டெடுத்த; கோண்டாவில் மேற்கு, பாரதி வீதியைச் சேர்ந்த

**திரு. இளையவன் கிட்டிணன்**

என்பவர் தனது மைத்துனர், இணுவில் கிழக்கைச் சேர்ந்த பொன்னன் பாலசிங்கத்துடன் நேற்றுமுன்தினம் (8.11.2004) எமது வீடு தேடி மேற்படி பொருளைக் கொண்டுவந்து தந்துள்ளார். அவரது நேர்மையையும், உயர்ந்த பண்பையும் பாராட்டுவதோடு, எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

என்றும் நன்றியுள்ள,
செ.முத்துலிங்கம் குடும்பத்தினர்.

காமாட்சி அம்பாள் கோவிலடி,
நீர்வேலி. (38454)(42-19-15-34)

# கண்ணீர் அஞ்சலி



யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆசிரியை

**செல்வி பராசக்தி நடராசா**

அவர்களின் மறைவு எமக்குப் பெரும் மன வேதனையைத் தருகின்றது. அவரது இழப்பால் பரிதவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(38460)(34-19-15)

## மயிலிட்டித்துறை க.தொ.கூ.ச.அங்கத்தினருக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராக உள்ள அனைவரும் தங்கள் குடும்ப அட்டை, அங்கத்துவப் புத்தகம், கடன் புத்தகம் என்பவற்றுடன் எரிஞ்சம்மன் கோயிலடி வியாபாரிமூலையில் உள்ள மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தற்போதைய பணிமனையில் 06. 11. 2004 தொடக்கம் 19. 11. 2004 ஆம் திகதிக்கிடையில் தங்கள் பதிவுகளை நேரடியாக வந்து செய்துகொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்,
மயிலிட்டித்துறை, க.தொ.கூ.சங்கம்.

(38457)(34-19-15)

# துயர் பகிர்கின்றோம்



கரம்பொன் காளிகோயிலடியை வதிவிடமாகவும் தற்போது 100, விஸ்வக் றோட், மட்டக்குளி, கொழும்பு 15 இல் வசித்தவருமாகிய 7.11.2004 அன்று காலமான

**திருமதி ஜெகநாதன் நாகேஸ்வரி**

அவர்களே!
தீர்க்க சுமங்கலியாய் வாழ்வில் வசந்தம்
தவழவிட்ட நீங்கள் திடீரென
மறைந்து போனதேனோ?
எங்கள் நினைவில் வாழும் தங்கள்

ஆத்மாசாந்திபெற சரவணை மேலுறை அருள்வரத காளி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஐ.கோ.சந்திரசேகரம் (J.P.) குடும்பம்
Deputy Chief Marshal, யாழ்.பல்கலைக்கழகம்.

(38450)(29-34-19-15)

# மரண அறிவித்தல்

**A.V.துரையப்பா (ஜே.பி.)**



(தலைவர் - பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், முன்னாள் தலைவர் - வர்த்தக சங்கம்)

ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சமாதான நீதவானும், பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், வர்த்தக சங்க முன்னாள் தலைவருமான A.V.துரையப்பா அவர்கள் 05.11.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாகிறெட்டின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புஷ்பா மற்றும் பாலச்சந்திரன், சித்திரா, இந்திரா, ரவிச்சந்திரன், செல்வச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (38458)(34-19-15)


தகவல்:
பாலச்சந்திரன் (மகன்).

# யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்தை முன்னேற்றுவதற்காக முனைப்புடன் செயற்பட்டவர் பேராசிரியர் துரைராஜா

**யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும், பேராசிரியருமான அ.துரைராஜா வின் 71ஆவது பிறந்ததினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதாரண குடும்பத்தில பிறந்து யாழ்ப்பாணத்துச் சராசரி மனிதர்களுடன் ஒன்றிணைந்து வாழ்ந்தவர் பேராசிரியர் துரைராஜா. இளமையில் உடுப்பிட்டி அமெரிகன மிசன் பாடசாலையில் கல்வி கற்று பின பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கணிதம் கற்று பல்கலைக்கழகத்திற்கு முதல் மாணவனாகத் தெரிவாகிப் பொறியியல் விஞ்ஞானப் பட்டம் பெற்றார். பின்னர் பிரித்தானியாவில் கலாநிதிப் பட்டம் பெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக, பேராசிரியராக, பீடாதிபதியாகச் சேவையாற்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராய் பணியாற்றிய எமது பேராசிரியரை நினைவு கூர்வது சாலப்பொருந்தும்.

பேராசிரியர் துரைராஜா தாய், தந்தைக்கு நல்ல பிள்ளை, சகோதரர்களுக்கு நல்ல முன்னோடி, தனது குடும்பத்திற்கு நல்ல தலைவன், தன் பிள்ளைகளுக்கு நல்ல தந்தை, மனைவிக்கு நல்ல கணவர். அவர் குடும்ப வாழவு யாழ்ப்பாணக் கந்தபுராண கலாசார வாழ்விற்கு நல்ல உதாரணம். பெரியோரை மதித்தல், ஆசிரியரை மதித்தல், சமய வாழ்வில் குடும்ப வாழ்வை ஒன்றிணைத்தல், தமிழர் கலாசாரத்தில் ஒன்றிப்போதல், கலாசார வாழ்வைத் தனது பெருமையாகக் கொள்ளல், அடுத்துவரும் சந்ததிககு தமிழர் வாழ்வியலின் பெருமைகளைக் கையளிததல் போன்றவை அவர் வாழ்வின் இயல்புகளாகும்.



பேராசிரியர் துரைராஜா யாழ்ப்பாணச் சமூகத்தை வலுவூட்டுவதற்காக அயராது உழைத தவர். பொறியியல் கல்வியைத் தனது மாணவர்களுக்கு விருப்புடன் கற்பித்தவர். தமிழ், சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் அவரை நல்ல குருவாக, நல்லாசானாக, மதித்து வாழ்ந்தனர். பேராசிரியரின் மாணவன் என்று சொல்வதால் தங்களைத் தாங்களே தரமுயர்ததிக் கொண்டவர்கள் பலர். அவர் மாணவர்களின் பெருமைக்குரியவர் என்பதுடன் நிற்காது மாணவர்களுக்குப் பெருமை சேர்த்தவர். எல்லோரையும் அறிவுடையவர்களாகவும், வினைத்திறனுடையவர்களாகவும் உருவாக்கவேண்டும் என்ற அவாவுடன் செயற்பட்டவர். அவரின் கல்விசார் வரலாற்றை அவர் மாணவர்களே உலகெங்கும் பரப்பி நிற்கின்றனர் என்றால் அவர் பெருமையைப் பறைசாற்ற வேறு யார் வேண்டும்.

தமிழர் தம் வாழ்விடங்களின் அபிவிருத்திககாகத் திட்டமிட்டு உதாரணமாகப் பொருளாதாரத தடையில் அழிந்து செயலற்றுப்போன யாழ்ப்பாணத்தை மீட்டெடுக்க எல்லாத் தரத்திலான. எல்லா வகையிலான கல்வியாளர்களையும் தொழிலநுட்பவியலாளர்களையும், தொழிலாளர்களையும் நிர்வாகிகளையும், சிவில்சமூக சங்கங்களையும் ஒன்றிணைத்துப் பொருளாதார அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டமிடலை மேற்கொண்டவர். யாழ்ப்பாண மக்கள் பொருளாதாரத் தடைகாரணமாக இழந்த வசதிகளை மீணடும் பெற அயராது உழைத்தபோது இடர்களால் யாழ்ப்பாணத்தவரின் பொருளாதார வாழ்வியலைத் தனது வாழ்வியலாக மாற்றிக் கொண்டவர். அக்கால வாழ்வில் வடமராட்சியிலிருந்து சாதாரண மனிதர்கள் சைக்கிளில வருவதுபோலத் தானும் சைக்கிளில் யாழ்ப்பாணம் வந்து துணைவேந்தராகப் பணியாற்றியவர். அக்காலத்தில் யாழ்ப்பாணச் சராசரி மனிதர்கள் வாழ்க்கை முறையைத் தனது குடும்ப வாழ்க்கை முறையாக மாற்றிக் கொண்டவர். துணைவேந்தர் பதவிக்கான வசதிகளைப் புறந்தள்ளி மக்களில் ஒருவராகத் தன்னை வரித்துக்கொண்டு வாழ்ந்து காட்டிய பெருமகன்.

தமிழர் நல்ல கல்வியைப் பெறவேண்டும் என்பதற்காகப் பல்கலைக்கழகக் கல்வி முறையில் தொழிலாளர் கல்வி, வெளிவாரிக் கற்கைகள் போன்றவற்றை அறிமுகப்படுத்தி யாழ்ப்பாணச் சமூகத்தைப் பல்கலைக்கழகம் வரை கொணடு வந்தவர். வடக்கு - கிழக்கு தமிழர்களில் பெரும பான்மையானோர் விவசாயிகளாகவும், மீன்பிடியாளர்களாகவும், இருப்பதால் விவசாயபீடத்தை கிளிநொச்சியில் நிறுவினார். மீன்பிடிக் கற்கைக கான திட்டங்களைத் தீட்டினார். விவசாய விளை நிலங்களுக்கிடையே விவசாயபீடம் இருப்பது போல எதிர்கால அபிவிருத்திக்கு வன்னிப் பெருநிலப்பரப்பே மையமானது, பாதுகாப்பானது, என்று கருதி பொறியியல் பீடம் ஒன்றை வன்னியில் நிறுவத் திட்டமிட்டுச் செயற்பட்டவர். இவரின் இம்முயற்சிகள் இடம், காலம், தேவை அறிந்து செயற்பட்டவர் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

ஒடுக்கப்பட்டவர்களிடமிருந்தும் ஏழைகளிடமிருந்தும் மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாகிகளிடத்தும் அன்பும் ஆதரவும் பரிவும் கருணையும் இருந்ததால் அவர் என்றும் எம்மனதில் விட்டகலா மேதையாகவே உள்ளார்.

**பேராசிரியர் ப. சிவநாதன்**
**தலைவர், பொருளியல்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம்**

# முல்லைத்தீவில் இரண்டு பாடசாலைகளில் கணனிப் பயிற்சி நிலையங்கள் திறப்பு

இலண்டன் 'ரிஆர்ரெக்' நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தினால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 50 பாடசாலைகளில் 5000 மாணவர்களுக்கு அடிப்படைக் கணனி அறிவினைப் புகட்டும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாகக் கடந்த 2ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பாடசாலைகளில் தகவல் தொழிலநுட்பப்பயிற்சிநெறி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதல் நிகழ்வு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் காலை 11.00 மணியளவில் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய அதிபர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. மங்கள விளக்கினை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குருகுலராஜா ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து தேசியத் கொடியினை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியினை அதிபர் சிவலிங்கம் ஏற்றிவைத் தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம் பெற்றது.

கணனிப் பயிற்சி நிலையத்தினைப் பொருணமிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

கல்விப்பணிப்பாளர் குருகுலராஜாவால் கணனிப்பயிற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது. வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, பொருண்மிய மதியுரையகத்தின் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், பொருணமிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா ஆகியோர் உரையாற்றினார்கள்.

இரண்டாவது நிகழ்வு, முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் முல்லைத்தீவு மகாவித்தியாலய ஆசிரியர் ஜெயவீரசிங்கம் தலைமையில் ஆரம்பமானது. மங்கள விளக்கினைப் பொருண்மிய மதியுரையகத்தின் பணிப்பாளர் மா.சுந்தரமூர்த்தி, முல்லைத்தீவு மகாவித்தியாலய உப அதிபர் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினைப் பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கமும் இடம்பெற்றது.

கணனிப் பயிற்சி நிலையத்தினைக் கரைச்சிப் பிரதேச செயலர் சோதிநாதன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் பொருண்மிய மதியுரையகத்தின் தலைவர் பேராசிரியர் அ.நவரட்ணராஜா கணனிப் பயிற்சியினைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.(8-405)

## அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் பிற்போடப்பட்டது

வட்டக்கச்சி,நவ.10

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது எனக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

மாதாந்தம் இரண்டாவது செவ்வாய்க்கிழமையே இக்கூட்டம் நடைபெறுவது வழக்கமாகும். இதன்படி நேற்று நடைபெறவேண்டிய இக்கூட்டம் 23ஆம் திகதி காலை 10 மணிக்குச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும், இதில் அனைத்து உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (8-405)

## கட்டாக்காலி நாய்கள் கரைச்சியில் அழிப்பு

கிளிநொச்சி,நவ.10

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கரைச்சிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாகக் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்து வருகின்றது. அதனால் ஏற்பட்ட சிரமங்கள் கரைச்சிப் பிரதேச சபைக்கு அபபகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்தே பிரதேச சபை, கட்டாக்காலி நாயகளை அழிக்கும் பணியினை ஆரம்பிதது்ளளது. (8-13-305)

## கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குப் புதிய அதிபர் நியமனம்

வட்டக்கச்சி,நவ.10

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்குப் புதிய அதிபராக இ.இராஜமகேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். கல்வி முதுமாணிப் பட்டம் பெற்ற இவர், முன்னர் வட்டக்கச்சி மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம் ஆகிவற்றில் அதிபராகக் கடமையாற்றியவராவார்.

மத்திய கல்லூரியில் முன்னர் அதிபராகக் கடமையாற்றிய வீ.இராசகுலசிங்கம் கண்டாவளைக் கோட்டக் கல்வி அலுவலராகப் பதவியுயர்வு பெற்றுச்சென்றமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 28ஆம் திகதி கடமையேற்றுள்ளார். (8-405)




# மனிதகுலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய அநீதியே பெண்களுக்கெதிரான வன்முறை

## மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு



கிளிநொச்சி,நவ.10

மனிதகுலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய சமூக அநீதியே பெண்களுக்கெதிரான வன்முறை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி.

கடந்த 5ஆம் திகதி கிளிநொச்சி பண்பாட்டு அரங்கில் ஒக்ஸ்பாம் நிறுவனத்தினர் நடத்திய "இல்லத்தில் பெண்கள் வன்முறைகளை இல்லாது ஒழிப்போம்" என்ற தொனியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தமிழினி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:-

அன்பு, கருணை, இரக்கம், பாசம் எனும் பதங்களைப் பெண்களுக்கே உரித்தானவை என்று கூறி அவர்களை அன்பினால் அடிபணிய வைத்து வன்முறைகளை அவர்கள் மீது திணிக்கும் ஒரு நாசூக்கான தந்திரத்தை இல்லங்களிலுள்ளவர்கள் கையாண்டு வருகின்றனர்.

பெண்கள் மீது திணிக்கும் வன்முறைகள் சமூகத்துக்கு விரோதமான மனிதகுலம் வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம்.

பெண்கள் இத்தகைய அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் இடையில் இருந்து விடுபட்டுக் கொள்ளவேண்டுமானால் உணர்வு நிலையைத் தாண்டி, பழைய சம்பிரதாய முறைகளை மூட்டை கட்டிவிட்டு அறிவுசார்ந்த முடிவுகளைச் சுயமாக எடுத்துக்கொள்ளவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் அரச, அரசசார்பற்ற பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் உட்படப் பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். (8-13-301)

## மருதங்கேணி வைத்தியசாலை இன்று திறக்கப்படுகிறது

மருதங்கேணி,நவ.10

புனரமைப்புச் செய்யப்பட்ட மருதங்கேணி வைத்தியசாலை இன்று புதன்கிழமை திறந்து வைக்கப்படுகின்றது.

இத்திறப்புவிழா நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருதங்கேணி உதவி அரச அதிபர், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். 'நிகொட்' நிறுவன உதவியுடன் இவ்வைத்தியசாலை புனரமைக்கப்பட்டது. (8)

SHARP
be sharp
கொண்டாட்டம்... கொண்டாட்டம்...
பிறவுன்ஸ் வழங்கும் நம்பமுடியாத கொடுப்பனவுகள் விரையுங்கள்...



ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் கூடிய Sharp T.V.5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையில்...

| | | |
|---|---|---|
| 14D25 | 20295 | 16775 |
| 20D25 | 30525 | 25000 |
| 21EFGIA | 38995 | 32956 |

இன்னும் பல கொடுப்பனவுகள்.....
BG BROWNS GROUP ESTD 1875
பிறவுன்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.
(C/38911)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் ந.சிவராஜா அவர்களின் பாசமிகு தாயார்



### திருமதி செல்லம்மா நடராஜா

அவர்களின் மரணச் செய்தி கேட்டு, நாம் ஆழ்ந்த துயரம் அடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/வண்ணை நாவலர் ம.வி.,
யாழ்ப்பாணம். (38474)(29) ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி யசோதா ஸ்ரீகுமரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### இசைநடிகமணி கலாபூஷணம் V.N. செல்வராசா

அவர்களின் மறைவுச் செய்தியறிந்து, எமது கல்லூரிச் சமூகம் அவரைப் பிரிந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர்,ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. (38470)(29)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெகநாதன் நாகேஸ்வரி (அனலைதீவு)



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கரம்பொன் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு, மட்டக்குளியில் வசித்துவருமாகிய திருமதி ஜெகநாதன் நாகேஸ்வரி அவர்கள் 07.11.2004 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - காமாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெகநாதன் (முன்னாள் உத்தியோகத்தர், கூட்டுறவு மொத்த வியாபாரக் களஞ்சியம், வெலிசறை) அவர்களின் பாசமிகு மனைவியும், அனலைதீவைச் சேர்ந்த புனிதவதி, குகனேஸ்வரி, மனோகரன் மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுரேஸ் (U.S.A.), காலஞ்சென்ற சுஜிதா மற்றும் சுதா (Swiss), சுதர்சன் (Colombo) ஆகியோரின் அன்புத் தாயும் வனிதா (U.S.A.), குலசேகரன் (Swiss) மாமியும், அக்ஷயன் (Swiss), ஆதீஸ் (U.S.A.) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை பி.ப. 4.00 மணி அளவில் நடைபெற்று, பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*100, விஸ்ட்வைக் றோட்,*
*கொழும்பு -15, T.P. : 2529992.*

தகவல்:
**கணவர், பிள்ளைகள்.**
(38483)(29-11-18)

### திருமதி பரமேஸ்வரி வேலாயுதபிள்ளை

கோப்பாய் தெற்கு, கும்பபிள்ளையைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி வேலாயுதபிள்ளை அவர்கள் 08.11.2004 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிராசா - சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகளும் வேலாயுதபிள்ளை (இளைப்பாறிய முகாமையாளர், நீர்வேலி ப.நோ.கூ.சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் நவநீதன் (வ.பி.போ.சபை, கோண்டாவில் சாலை) அவர்களின் அருமைத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*கரந்தன் வீதி,*
*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.* (38479)(29-11-18)

தகவல்:
நவநீதன் (மகன்).
(வ.பி.போ.சபை, கோண்டாவில்).

### திருமதி செல்லம்மா நடராசா



கொட்டடி, சீனிவாசகம் வீதியைப் பிறப்பிடமாகவும பிறவுண் வீதி, நிராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா நடராசா அவர்கள் நேற்று (2004-11-09) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம், இராசம்மா, கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரஸ்வதி (லண்டன், ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), பத்மாவதி (கனடா), சிவராஜா (அதிபர், யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்), சிவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குலசிங்கம் (லண்டன், ஓய்வுபெற்ற பிரதி அதிபர், யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), அமிர்தலிங்கம் (கனடா), சந்திரமணி, சண்முகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் சாந்தினி - ஸ்ரீகாந்தன் கனடா), குமுதினி - தம்பிநாதர் (கனடா), மாலினி - சண்முகநாதன் (லண்டன்), சுதாகரன் - சுஜிதா (லண்டன்) ரஞ்சன் - நமர்தா (கனடா),ரமணி - சோதிநாதன் (கனடா), தர்சினி - உதயகுமார் (கனடா), மதனலோஜனி - ஞானேஸ்வரன் (கனடா), சுகிர்தவேணி - குகநேசன் (கனடா), சசிகா (4ஆம் வருடம். சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீபன் (CARLETON UNIVERSITY, கனடா), வினுதீப் (யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி), கோகுலதர்சன் (கனடா), கோகுலவதனன் (கனடா), தாரகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லண்டனைச் சேர்ந்த மீனுஜா, ஜானவி, றங்கீத், தரங்கீத் ஆகியோரினதும் கனடாவைச் சேர்ந்த சுமீதன், மாதுரி, தாரணி, துஷான்,. தர்மிகா, லயனிகா, பிரித்திகா, கிறிஷாந், வாணிஜா, விஷ்னவா ஆகியோரினதும் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (2004-11-10) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.சிவராஜா (மகன்).
அதிபர், யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்.

*89/9, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (38471) (26-11-18-29)

## சாவகச்சேரியில் இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,நவ.10

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வசந்த இராகங்கள் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்த இசை நிகழ்ச்சி மூலம் பெறப்படும் நிதி வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் ஊனமுற்ற சிறார்கள், நலிவுற்ற மக்கள் ஆகியோரின் வாழ்க்கைக்காகவும் பயன்படுத்தப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன் செ.கா. நவரத்தினம் தெரிவித்துள்ளார்.

(10-117-202)

## விளையாட்டுப் போட்டி

கோப்பாய்,நவ.10

தீபாவளி தினத்தை முன்னிட்டு கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் விளையாட்டுப்போட்டி, நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் சிறப்புவிருந்தினராக வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் க.சங்கரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(10-72)

## ஆலயக் கட்டடங்களுக்கு மட்டுவிலில் அடிக்கல்

சாவகச்சேரி,நவ.10

மட்டுவில் விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலய வசந்த மண்டபம், மகா மண்டபம் என்பவற்றிற்கான மீளப்புனரமைப்புச் செய்வதற்கான அடிக்கல் நடுதல் விழா கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது.

வசந்தமண்டபம் சுமார் 7 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த ஆலயம் கடந்த 2000ஆம் ஆண்டு தென்மராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் சேதமானது குறிப்பிடத்தக்கது.

(6-31)

## பற்றைகள் துப்புரவு செய்யும் பணி

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.முற்றவெளிப் பகுதியில் காணப்படும் பற்றைகளைத் துப்புரவாக்கும் பணி, யாழ். மாநகரசபை ஊழியர்களால் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் மேற்படி பணி தொடர்ந்து நடைபெற்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

(10-12)

## மஞ்சவனப்பதியில் சமயதீட்சை

யாழ்ப்பாணம்,நவ.10

யாழ்.சைவபரிபாலனசபையின் அனுசரணையுடன், கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் சமய தீட்சை வழங்கும் நிகழவு நடைபெறும் என்றும் -

சமயதீட்சை பெற விரும்புவோர் தம்முடன தொடர்பு கொள்ளலாம் என்றும் - ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (எ)

## இன்றைய ஆட்டம்


தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்டப் பிரிவினரால் மாவீரர் நினைவாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

யாழ்ப்பாணம் சென் மேரிஸ் விளையாட்டுக கழகம் எதிர் ஏழாலை மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்.

(10-7-86)

## மரண அறிவித்தல்கள்

### வேலாயுதர் நாகராசா
### (ஓய்வுபெற்ற அதிபர், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)



சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலாயுதர் நாகராசா நேற்று (09.11.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் காலமானார்.

அன்னார் வேலாயுதர் - இராஜராஜேஸ்வரி தம்பதிகளின் புத்திரனும் செல்வநாச்சியாரின் பாசமிகு கணவரும் சி.தேவகி (கனடா), த.வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவராஜகோபால் (கனடா), தயாபரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற லீலாவதி, திலகவதி (U.S.A.), புனிதவதி (U.S.A.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் Dr.சேனாதிராஜா (U.S.A.) அவர்களின் அன்பு மைத்துனரும் சரோன், அருண் ஆகியோரின் அன்புப் பேரனாரும் புஸ்பராசா, திருமதி ஸ்ரீபவானி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, நணபகல் 12 மணியளவில் திருவடிநிலை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தயாள் நிவாஸ்"*
*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.* (சி-38969)(29-11-18)

தகவல்:
நா.செல்வநாச்சியார் (மனைவி).

### அம்பலவாணர் அட்சரலிங்கம்
### (கண்டு)



கச்சாய் தெற்கு, கொடிகாமத்தை வசிப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் அட்சரலிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (2004.11.08) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - சின்னம்மா அவர்களின் அன்பு மகனும் பூரணம் அவர்களின் கணவரும் சுந்தரலிங்கம் (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (ஜேர்மனி), விநாயகலிங்கம் (அமெரிக்கா), உமாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தனபாலசிங்கம், சேதுலிங்கம், தில்லைநாதன், சிவலிங்கம், அமிர்தநாயகி ஆகியோரின் சகோதரரும் பரராஜசிங்கம் (கொழும்பு), அருளானந்தம் (ஜேர்மனி), அமிர்தலிங்கம், ஜெயலட்சுமி (வன்னேரிக்குளம்), சங்கரப்பிள்ளை (திருவருள் ஸ்ரோர்ஸ், கொடிகாமம்) ஆகியோரின் மைத்துனரும் திவ்வியராணி (ஜேர்மனி), தர்மினி (ஜேர்மனி), இராஜேஸ்வரநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அனிற்றா, அனுஷா, (ஜேர்மனி), அருந்ததி, லாருறா (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் வெள்ளாம் போக்கட்டி கொப்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கச்சாய் தெற்கு,*
*கொடிகாமம்.* (சி-38968)(29-11-18)

தகவல்:
A.பூரணம் (மனைவி),
R.உமாதேவி (மகள்).


Jayoda ஜயோதா ජයෝද

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 6509161 முதல் 6522178 வரை
சீட்டிழுப்பு இல. 83 திகதி 08-11-2004

வெற்றி எண்கள் **7 8 4 7 3 7** சுப்பர் எண் **23**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,09,28,325/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,09,28,325/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 116 | 5,000/- | 5,80,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,149 | 500/- | 5,74,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,464 | 50/- | 5,73,200/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,13,612 | 10/- | 11,36,120/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 14 | 5,000/- | 70,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 1,000/- | 1,09,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,1148 | 100/- | 1,14,800/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,370 | 20/- | 2,27,400/- |
| மொத்தம் | 1,39,002 | | 64,87,620 /- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 64,87,620/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,12,47,125/-**

தொடர் இல. 7476603 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 11 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6517158-4-59
6512273-5-37
6516397-7-10
6509195-4-97
6520441-7-75
6515191-4-85
6512830-2-63
6516236-4-66

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## தவறிவிட்டது

கைதடி தெற்கைச் சேர்ந்த தளையசிங்கம் வித்தியா என்பவரது கையடக்கத்தொலைபேசி, தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், ரக்ஸ் ஆகியன அடங்கிய பேர்ஸ் கொக்குவில் மேற்கு மகாலிங்கம் வீதியில் நேற்று (09.11.2004) செவ்வாய்க்கிழமை தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: T.வித்தியா
257, மானிப்பாய் வீதி
(வைத்தீஸ்வராச் சந்திக்கு அருகில்),
(38481) யாழ்ப்பாணம். T.P.: 0777110133


லக்ஷ்மி சினிமா இணுவில்

மகத்தான தீபாவளி புதிய வெளியீடாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில் சிம்பு, ஜோதிகா, நடிப்பில்

தினசரி: 11.00, 3.00, 7.00, 10.00 புதிய நேரம்

மன்மதன்



இன்று மட்டும் 10.11.04 அரவிந்தன்

பதிவு ஆசனம்: 0776592008 (38460)

நாகம்மஸ் சினிமா சுன்னாகம்

அர்ஜுன், மாராதத்தா நடித்த அரசாட்சி

தினசரி 11.00 3.00 7.00 10.00 (பு.நே)

தீபாவளி வெளியீடாக இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக R.B. சௌத்திரியின் தயாரிப்பில் சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த

ரிக்கற் முற்பதிவுகள் ... யாழ்ப்பாணம். நாகம்மஸ் சினிமா.

சத்ரபதி



(C-37740)

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

கம்பஸ் காட்சி நேரம் 10.30, 2.30, 6.30,

இரவு 8.30 இற்கு Spider Man I

மிகவிரைவில ட்றீம்ஸ் (ரீல்ஸ)

(சி-38673)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று மட்டும் ரவிகிருஸ்ணா, சோனியா அகர்வால் நடிப்பில்

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 மட்டும்.

7/G ரெயின்போ காலனி (ரீல்ஸ்)

11 முதல் அஜித் + அஜித் அட்டகாசம் (சி-38750)

ரிக்கெட் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

நிரஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், பிரபுதேவா, வடிவேல் நடித்த

எங்கள் அண்ணா (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (புதியநேரம்)

DARE DRVALIN

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 பு.நே. (சி-38672)


## ஆசிரியருக்கு உதவுத்தொகை

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடல் வளம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான உதவுத்தொகை நாளைமறுதினம் பிற்பகல் 2.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது. உறுதிப் படுத்திய கடிதத்துடன் யாழ். கல்வி மேம்பாட்டுப்பேரவை அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாவட்டக்கல்விக் கழகப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-க)


வெளிநாட்டு அழைப்புகளுக்கு

கனனி மூலம் வெளிநாட்டு அழைப்பினை பெறுவதற்கு நிமிடத்திற்கு 1.80 சதம் மட்டுமே

திருமுருகன் கொம் நெற்

Opposite Dialog phone shop
259, கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@yoomail.com

பலநோக்கு கூ. ச. முன்பாக
66, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310


## வீடு விற்பனைக்கு

ஏழாலை மேற்கு மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் பிரதான வீதியில் 5½ பரப்பு காணியில் அமைந்த 4000 சதுரஅடி பரப்புள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. சனி மாலைவரை பார்வையிடலாம்.

தொடர்பு: T.P:0777175729

(38482)

## காணி - வீடு விற்பனைக்குண்டு

சண்டிலிப்பாய் - மாகியப்பிட்டிச் சந்தைக்கு அருகில் 9¼ பரப்புக் காணியும் வீடும் உடன்விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:
திரு.அ.பஞ்சலிங்கம்,
கோப்பாய் வீதி, உரும்பிராய்.

(38476)

## கறுவாக்கேணியில் துப்பாக்கிச்சூடு; இளைஞர் காயம்!

வாழைச்சேனை பொலீஸ் பிரிவிற் குட்பட்ட கறுவாககேணி பொது விளையாட்டு மைதானத்திற்கு அருகில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவா படு காயமடைந்தார்.

காலை 8.30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது. படுகாயமடைந்த இளைஞர் கோ.புனிதராஜா (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் சிறியரக கைத்துப்பாக்கியினால் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என வாழைச்சேனை பொலீஸ்ஸார் கூறினர். துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் குறித்த இளைஞர் வாழைச்சேனை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-க)

## தயவுசெய்து ஒப்படைத்துதவவும்

நேற்றையதினம் புளியங்குளத்தில் உள்ள தடைமுகாமில் சுவ'ஸில் இருந்து கொண்டுவரப்பட்ட பிரிண்டர் HB, HB பனசொனிக் கமெரா, தொலைபேசி, வோக்மன், பற்றிசார்ஜர், ஈஜிகாட், மதுபானம் மற்றும் உடுபுடைவைகள் அடங்கிய பார்ஷல் ஒன்று கைமாறிவிட்டது.

தயவுசெய்து இதனைக் கைமாறி எடுத்தவர்கள் கருணைகூர்ந்து "யோகா ஆடை அகம்" இல.17, நவீன சந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம்.T.P.: 021 222 3918, 0777 273799 என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(38970)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை வானொலி புகழ் இசைநடிகமணி, நாடகக் கலாஜோதி, கலாபூஷணம், கலைஞானகேசரி

**அமரர் V.N. செல்வராசா**

அவர்கள் 07.11.2004 (ஞாயிறு) அன்று காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அரியாலையூர் நடிக கலாமணி
வ.செல்வரெத்தினம் குடும்பத்தினர்.

(38487) (32-14-18)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கோபாலப்பிள்ளை

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரம், சாட்டி, வேலணையை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கோபாலப்பிள்ளை அவர்கள் நேற்று (09.11.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் மரியமலரின் அன்புக் கணவரும் அன்ரன் பெனடிற் (லண்டன்), மேரி ஜெனிஸ்ரா, யுனிஸ்ரா, ரமேஸ், சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அன்ரன் ஜெறோவின் (சுபிட்ஜன் புடைவையக உரிமையாளர், யாழ்ப்பாணம்) மாமனாரும் சுபிட்ஜன், கவிசாளினி ஆகியோரின் பேரனாரும் இந்திராணி, சந்திரா, ஜெயராணி, செல்வரட்ணம் (ஹொலண்ட்), காலஞ்சென்ற பூலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.11.2004) புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து ஆனைக்கோட்டை புனித அடைக்கல மாதா கோயிலுக்கு எடுத்துச்செல்லப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரமேஸ் (மகன்)
(சாட்டி மாதா கோயிலடி)

*3 ஆம் கட்டை,*
*ஆனைக்கோட்டை.* (38447)(38-14-18-32)

## திருமதி பத்மநாதன் ஜெயலஷ்மி (ஜெயா)

கொழும்பைப் பிறப்பிடமாகவும் இல.98, றக்கா றோட், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் ஜெயலஷ்மி (ஜெயா) அவர்கள் நேற்று (09.11.2004) செவ்வாய்க்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் பத்மநாதனின் அன்பு மனைவியும் கோபிநாத், தட்சணா ஆகியோரின் அன்புத் தாயாரும் கோகிலம் - சண்முகசுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும் ஜெகதா, வசந்தி, ஸ்ரீஸ்கந்தராஜ் (மதுமி கூல்பார் - யாழ்ப்பாணம்), நாகராஜ், கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை அவரின் கொழும்பு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பத்மநாதன் (கணவர்),
இல. 98, றக்கா றோட்,
யாழ்ப்பாணம்.

*'கோகுலம்',*
*268/100, அலுத்மாவத்தை,*
*கொழும்பு -15.* (38486)(38-14-18-32)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## திருமதி அருளம்பலம் புவனேஸ்வரி

### (தாவடி பெரியக்கா)



அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் வதிவிடமாய்
நட்பின் இலக்கணமாய்
வாழ்ந்த எம் ஆருயிர் அம்மாவே!
இல்லற வாழ்வை இனிதே வாழ்ந்து
பதினொரு முத்துக்களை ஈன்றெடுத்து
பார்போற்றும் உத்தமர்களாய் வளர்த்து
தெய்வமாகத் திகழும் அம்மாவே!
உங்கள் பிரிவை நினைத்து தினம் தினம் வாடும்
அப்பாவைப் பார்க்கும் பொழுது எங்கள்
நெஞ்சமே கலங்குகிறது அம்மா!
மலர்ந்த முகத்துடன் விருந்தினரை உபசரித்து
வந்த மருமக்களைத் தனது பிள்ளைகளாகவே மதித்து
வாழ்ந்த பெருமையுடைய அம்மாவே!
இனிமையான பேச்சும் அன்பான அரவணைப்பும்
எங்கள் உயிர் உள்ளளவும் எமது மனங்களில்
நீங்காத நினைவுகளாக என்றும் இருந்த வண்ணம்
உள்ளதம்மா....!

இன்று (10.11.2004) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனததிலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 15.10.1922

மறைவு 11.10.2004

இல.45, கலட்டி அம்மன் வீதி,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5229

(38485) (32-14-18)

*உங்கள் பிரிவுத்துயரால் வாடும்:*
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 12இந்திய மீனவர் மன்னாரில் கைது!

மன்னார்,நவ.10

தலைமன்னார் கடற்பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 12 இந்திய மீனவர்களைத் தலைமன்னார் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு தலைமன்னார் வடகடல் பிரதேசத்தில் மூன்று இழுவைப் படகுகளில் மீன்பிடித்துக்கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களையே தலைமன்னார் கடற்படையினர் கைதுசெய்து பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்கள் நேற்று மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டனர்.

12 பேரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எம்.அப்துல்லா உத்தரவிட்டார். இதனையடுத்து, இவர்கள் உடனடியாக அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்துச்செல்லப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட மூன்று இழுவைப் படகுகளும் தலைமன்னார் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-7)

## சட்டவிரோத மின் இணைப்பால் நேற்றும் ஒருவர் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம்,நவ.10

ஊரெழு மேறகுப் பகுதியில் நேற்றுக்காலை வேளை இளைஞர் ஒருவர் மின்தாக்கி உயிரிழந்தார்.

வீட்டில் நடைபெற்ற வைபவம் ஒன்றுக்காக மின் இணைப்பை ஏற்படுத்திவிட்டு பின்னர் அதனைத் துண்டித்த சமயம் மின் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இரத்தினசிங்கம் பிரபா என்ற பத்தொன்பது வயது இளைஞனே உயிரிழந்தவராவார். இவரது சடலம் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணையின் பின் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டது.

மல்லாகம் மாவட்ட பதில் நீதிவான் எஸ். வசந்தசேனன் சடலத்தைப் பிரேதபரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டார்.

சுன்னாகம் பொலீஸ் குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் சுனில் சாந்தா, பொலீஸ அலுவலர் டேவிற் ஆகியோர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சட்டவிரோதமாகப் பெறப்படும் மின் இணைப்புகளால் உயிரிழப்புகள் ஏற்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. (ஐ-86-12-15-72)

## காணாமற்போன மீனவர் இன்னும் மீட்கப்படவில்லை

கரவெட்டி, நவ.10

வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி கடற்பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்ற சமயம் படகிலிருந்து தவறிவிழ்ந்து காணாமற்போன மீனவரைத் தேடும் பணி தொடர்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வல்வெட்டித்துறை ஆதிகோயிலடி கடற்பிர தேசத்தில் மீன்பிடிக்கச் சென்றவர்களில் ஒருவரான எஸ். கருணாகரன் கடல் கொந்தளிப்புக் காரணமாகப் படகிலிருந்து தூக்கி வீசப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து வடமராட்சி மீனவ சங்கங்களைச் சேர்ந்தோர் படகுகளில் சென்று கடலில் தேடுதல் நடத்தினர். எனினும், நேற்று மாலைவரை அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

தேடுதல் தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. இது தொடர்பாகக் கடற்படையினர், கடற்புலிகள் மற்றும் இராணுவத்தினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-70)

## மக்கள்வங்கியின் கிளைகள் தீபாவளியன்று திறந்திருக்கும்

கொழும்பு,நவ.11

தீபாவளித் தினமான நாளை வியாழக்கிழமை மக்கள் வங்கியின் குறிப்பிட்ட சில கிளைகள் வங்கி நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்கும் என வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ்.டபிள்யூ.கமகே அறிவித்துள்ளார்.

தமிழர் செறிந்துவாழும் பகுதிகளில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகள் தீபாவளித்தினத்தில் கொடுக்கல், வாங்கல்களுக்குத் திறந்திருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் பணத்தை வைப்பிலிடும் வாடிக்கையாளர்களுக்குப் பித்தளை விளக்கு ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.

தீபாவளியை முன்னிட்டு மக்கள்வங்கி ஏற்பாடு செய்துள்ள சம்பிரதாயபூர்வ நிகழ்வு வங்கியின் வெள்ளவத்தைக் கிளையில் நடைபெறும் என்றும் -

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி போன்ற மக்கள் வங்கிக் கிளைகளிலும் தீபாவளி நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்றும் வங்கிப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## ஏ-9 போக்குவரத்து நாளை நீடிக்கப்படுமா?

வவுனியா, நவ.10

தீபாவளிப் பண்டிகைத் தினமான நாளை ஏ-9 பாதையில் ஓமந்தை, புளியங்குளம் சோதனைச் சாவடிகளை 24 மணிநேரமும் திறந்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வவுனியா படைத் தலைமையகத்தை மேற்கோள்காட்டி சிலசெய்தி ஏஜென்ஸிகள் இந்தத் தகவலை வெளியிட்டன.

எனினும், யாழ். படைத்தரப்பில் இருந்தோ, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தோ இது தொடர்பாக உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் நேற்றிரவுவரை வெளியாகவில்லை. (ஐ-164)

## பஸ்ஸில் எடுத்துச்செல்லப்பட்டுக்கொண்டிருந்த ஒய்வூதியப்பணம் ரூபா ஏழு லட்சம் கொள்ளை!

கொழும்பு,நவ.10

ஓய்வூதியம் வழங்குவதற்காக பஸ்ஸில் எடுத்துச்செல்லப்பட்ட சுமார் ஏழு லட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 6.20 மணியளவில் காலி தபாலகத்தில் இருந்து 13 தபால் பொதிகளில் தென்பகுதியில் உள்ள சில தபாலகங்களுக்கு ஓய்வூதியப் பணம் அனுப்பப்பட்டது. இந்தப் பொதிகள் பஸ்ஸில் எடுத்துச்செல்லப்பட்டன. கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு முன்னால் ஏற்கனவே ஓட்டோ ஒன்றில் காத்திருந்தவர்கள் எனக் கூறப்படும் மூன்று கொள்ளையர்கள் பஸ்ஸை வழிமறித்து துப்பாக்கி முனையில் பணத்துடன் இருந்த தபால் பொதிகளைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்று பொலீஸார் கூறினர். சாரதி, பஸ் நடத்துநர் மற்றும் பயணிகள் அனைவரும் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்தக் கொள்ளையில் சம்பந்தப்பட்ட நபர்கள் குறித்துத் தமக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது என்று காலி பொலீஸார் தெரிவித்தனர். கொள்ளையர்களைத் தேடும் நடவடிக்கையில் பொலீஸார் ஈடுபட்டனர். (ஐ-க)

## வன்னி வந்த...

ரில் பாலசிங்கம் தம்பதியர் வன்னி புறப்பட்டனர்.

முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் அவர்களின ஹெலிகொப்டர் வந்திறங்கியது. அவர்களை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், கடற்புலித் தளபதி கேணல் சூசை, தளபதிகள் ஜெயம், ரமேஷ், விதுஷா, தமிழினி ஆகியோர் வரவேற்றனர்.

ஹெலிகொப்டரிலிருந்து இறங்கி ஏனைய போராளிகளுடன் உரையாடிய பாலசிங்கம், சற்றுநேரம் பிரயாணக் களைப்புத்தீரத் தம்மை ஆசுவாசப்படுத்திக்கொண்டு தலைவர் பிரபாகரனைச் சந்திக்க விரைந்தார்.

நாளை வன்னிக்கு வரும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸனுக்கும், தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் இடம்பெறவிருக்கும் சந்திப்பின்போது பேசப்படவேண்டிய விடயங்கள் குறித்து இருவரும் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தலைவர் பிரபா, பீற்றர்ஸன் சந்திப்பின்போது பாலசிங்கமும் உடனிருப்பார் என்பது தெரிந்ததே. (ஐ-3)

## மன்னாரில் மாணவர் போராட்டம்

மன்னார் மாவட்ட மாணவர்கள் இன்று காலை கண்டனப்பேரணியொன்றை நடத்தவுள்ளனர். கொழும்பு போன்ற மாவட்டங்களிலிருந்து உயர்தர மாணவர்கள் மன்னார் மாவட்டத்தில் பரீட்சை எழுதி பல்கலைக்கழகங்களுக்கு இலகுவாக நுழைவதைத் தடுக்கக் கோரியே இந்தக் கண்டனப் பேரணி நடத்தப்படவுள்ளது. (ஐ-7)

## பாதுகாப்பு...

ஸனையும் சந்திப்பதற்காகத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அங்கு, இங்கு சென்று வருவார். அதையொட்டி விஷமத்தனமான முயற்சிகள் எடுக்கப்படலாம் என்று கருதியே முன்னேற்பாடாக - முன் எச்சரிக்கையாக - கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் புலிகள் செய்திருக்கின்றார்கள் என்று கூறப்பட்டது. (ஐ-3)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பர் இராசையா



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பர் இராசையா அவர்கள் நேற்று (09.11.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை கந்தரோடையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சரவணபவனம்"*
*கணக்கர் வளவு,*
*கந்தரோடை, சுன்னாகம்.*

தகவல்:
ச.ரவிக்குமார்.

(சி-38488)(38-14-18)

### திருமதி மொனிக்கம்மா பிரான்சிஸ்

(மண்டைதீவு)



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மொனிக்கம்மா பிரான்சிஸ் 08.11.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரான்சிஸ் (முத்துமாணிக்கம்) அவர்களின் அன்பு மனைவியும் அந்தோனி யேசுதாசன் (அன்ரன் - பிரான்ஸ்), அன்ரனி மரியதாஸ் D.A.M(Cey.) B.A. (Jaffna) கிராம அலுவலர் மண்டைதீவு கிழக்கு (J/07) ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரி சிறீலா யேசுதாசன் (பேபி - பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமியாரும் தெரேசிற்றா (சிந்து - பிரான்ஸ்), ஜெப்றி (பிரான்ஸ்), தியறி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கிறிஸ்ரினாப்பிள்ளை, அக்கினேஸ் (பிள்ளையம்மா), அலக்சாண்டர் (எம்பரதோர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.11.2004) புதன்கிழமை பி.ப.3.00 மணிக்கு உயரப்புலம் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இடம்பெற்று, பூதவுடல் ஆனைக்கோட்டை புனித-அடைக்கல நாயகி ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
*அடைக்கலநாயகி வீதி,*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*

தகவல்:
பி.அன்ரனி மரியதாஸ்
(மகன்)
கிராம அலுவலர் (J/07)
மண்டைதீவு கிழக்கு,
மண்டைதீவு.

(38489)(43-33-38-14-18)


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**14-11-2004**

இக்கல்வியாண்டு 2004/2005 இற்குரிய இறுதிப் பிரிவுகளிற்கான வகுப்புக்கள் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இப்பிரிவில் அனைத்துக் கணனிக்கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன. புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் கீழ் தெரிவுசெயயப்பட்ட மாணவர்கள் இவ் இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS,யாழ்ப்பாணம்.

(சி38573)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை, நகரப்பகுதியில் பல கடைத் தொகுதி கட்டக்கூடிய 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. பருத்தித்துறை சுசீலா நகைமாடத்திற்குப் பின் பகுதியிலிருந்து நிசாந்தன் சலூன்வரை தொடர் நிலப்பரப்பாகவுள்ளது.

தொடர்புக்கு: தொலைபேசி இல.
077 6281698, 077 6176982
காணி உரிமையாளரை 14.11.2004
ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையில்
நேரில் சந்திக்கமுடியும். (சி-38972)

**CCS**

**COLLEGE OF COMPUTER STUDIES**

2 ஆம் வருடப் பூர்த்தியினை முன்னிட்டு மாபெரும் புலமைப்பரீட்சைத் திட்டம் 2004 - 2005 விண்ணப்பிக்கத் தவறாதீர்கள். மேலதிக விவரங்களுக்கு:

இல.119, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்.
தொ.பே 0777 279034.

**மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2005**

எமது நிறுவனத்தால் ஆண்டுதோறும் கணனித்துறையிலே ஆர்வமுள்ள மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் கல்வியாண்டு 2005/2006 இற்கான புலமைப்பரிசில்' திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எதிர்வரும் கல்வியாண்டு எமது நிறுவனத்தின் 10ஆவது சிறப்பு வெற்றியாண்டு என்பதால் மாணவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்குவதற்கு நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்...
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்...

**விண்ணப்ப முடிவு திகதி: 30-11-2004**

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

(சி-38571)(30-14-32-17)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.